விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 16 | வெள்ளிக்கிழமை (31.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 11

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

# யாழ். வந்த பிரதமர் குழுவுக்கு புலோலியில் பெரும் எதிர்ப்பு

## பழஞ்சோற்றை வீசி எறிந்து பொதுமக்களால் விரட்டியடிப்பு

(வடமராட்சிச் செய்தியாளர்கள்)

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் வடமராட்சிக் கரையோரப் பகுதி மக்களை பார்வையிடுவதற்கு வந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஸ மற்றும் ஜே. வி. பி. யினர் தலைமையிலான குழுவினருக்கு புலோலி நலன்புரி முகாமில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

நீண்ட நாட்களின் பின்னர் இங்கு ஏன் வந்தீர்கள் என்று கேட்டு பழஞ்சோற்றினை அவர்கள் மீது வீசி எறிந்து பொது மக்கள் பெரும் ரகளையில் ஈடுபட்டனர். இதனால் நேற்று அங்கு பெரும் பரபரப்பும் பதற்றமும் உருவானது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத் தொடர்பு சேவை இலவசம்

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் நன்மை கருதி தொலைத்தொடர்புகளினை இலகுபடுத்துவதற்காக சன்ரல் தொலைத் தொடர்பு நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் ஐந்து இடங்களில் தற்காலிக இலவச தொலைத் தொடர்பு நிலையங்களினை அமைத்துள்

(14 ஆம் பக்கம் பார்க்க)



பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிக்கும்

## புலிகளின் திட்டங்களுக்கு அரசு பச்சைக் கொடி

(கிளிநொச்சி)

கடல் அனர்த்தத்தினால் ஏற்பட்ட மனித அவலம் நிறைந்த நெருக்கடிக்கு நாங்கள் எல்லோரும் ஒண்றிணைந்து இந்த அழிவில் இருந்து எஞ்சிய, தப்பிப் பிழைத்த எமது மக்களின் மறுவாழ்வுப் பணிக்காக உழைக்க வேண்டும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் சம்மந்தமாக எங்களுடைய திட்டமிடல் செயலகத்தில் பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திட்டமிடல் செயலகமும் அதனுடன் உதவியாக சமாதானச் செயலகமும் இணைந்து அனைத்து சர்வதேச உதவிகளையும் சரியான வகையில் முன்னெடுப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தேசிய துக்கதினம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கடற் பிராந்தியத்தில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களின் நினைவாக இன்று தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

துக்கதினத்தை குறிக்கும் வகையில் கறுப்பு கொடிகளைப் பறக்கவிட்டும் சோக கீதங்களை இசைக்கவிட்டும் துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

அத்துடன் நண்பகல் 12 மணிமுதல் 12.10 மணிவரை அலுவலகங்கள், வீடுகள், வணிக நிலையங்கள் என்பவற்றில் தமது பணியை நிறுத்தி துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் இன்று துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு கேட்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கடல் அனர்த்த எச்சரிக்கையால்

## குடாநாட்டில் கரையோர பகுதி மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இந்தியக் கடற் பிராந்தியத்தில் நேற்றுக் காலை மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக் கடற் பரப்பிலும் இவ்வாறான தாக்கம் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து மாதகல் வடமராட்சி மற்றும் தீவுப்பிரதேசங்களில் கரையோரமாகவுள்ள மக்கள் அச்சம் காரணமாக நேற்று இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

கரையோரப் பகுதி மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு இளவாலை பொலிஸார் விடுத்த எச்சரிக்கையை அடுத்து இளவாலை மற்றும் மாதகல் பகுதிகளில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து இளவாலை சென்யூட் தேவாலயத்தில் தங்கியுள்ளனர்.

இதேவேளை புங்குடுதீவுப் பிரதேசத்தில் உள்ள கரையோர வாழ் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு கடற்படையினர் விடுத்த வேண்டுகோளையடுத்து மடத்துவெளி, ஊரதீவு, கண்ணகி அம்மன் கோவிலடி, குறிகாட்டுவான் மற்றும் இறுப்பிட்டி பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு லட்சம் பேர் அனர்த்தத்தில் பலி

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் தென்னாசியா, தென்கிழக்காசியாவில் ஒரு இலட்சம் வரையிலானோர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 26 ஆம் திகதி தென்கிழக்காசிய, தென்னாசிய நாடுகளில் இவ் அனர்த்தம் இடம்பெற்றது.

இவ் அனர்த்தத்தினால் இந்தோனேசியாவில் மாத்திரம் 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இலங்கையில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் இந்தியாவில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் பலியாகியுள்ளனர்.

இதேவேளை மீட்புப் பணிகள் அனைத்து நாடுகளிலும் முடுக்கிவிடப்பட்டுள்ள போதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுச் செயலணி ஊடாக உதவு பொருட்களை வழங்குக

(யாழ்ப்பாணம்)

'சுனாமி' கடல் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுபவர்கள் யாழ். மாவட்ட கூட்டுச் செயலணி ஊடாக வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து கூட்டுச் செயலணியை ஏற்படுத்தியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணப் பணிகள் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட செயலணி மூலம் உதவிவழங்க முன்வந்துள்ள அனைவரும் தமது உதவிகளை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள தலைமைக் காரியாலயத்துடன் நேரடியாகவோ அல்லது 2263200, 2264017 என்ற இலக்கத்துடனோ தொடர்புகொண்டு உதவி வழங்க வேண்டிய முகாம்களை தெரிந்து கொள்ளலாம் என கூட்டுச செயலணி அறிவித்துள்ளது.

(ர)

முல்லைத்தீவில் விடுமுறையைக் கழிக்கச் சென்ற

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த யாழ். மாணவர்கள் மூவர் கடலுக்குப் பலி

பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக முல்லைத்தீவிற்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வெள்ள அனர்த்தத்திற்குள் சிக்கி உயிரிழந்துள்ளனர். இச்சம்பவத்தில் கரணவாய் மத்தியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் ரஜிந்தா (வயது 15), இராஜேஸ்வரன் சர்மினி (வயது 13), இராஜேஸ்வரன் டிலைசன் (வயது 11) ஆகிய மூவருமே பலியாகியுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, யாழ். கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்த மேற்படி மாணவர்களும் பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக புதுக்குடியிருப்பிலிருக்கும் சிறியதாயின் வீட்டிற்குச் சென்றுள்ளனர். அங்கு தங்கியிருந்த இவர்கள் கடல் அனர்த்தத் தில் சிக்கிப் பலியாகியுள்ளனர்.

இவர்களுடன் அவ்வீட்டில் இருந்த உறவினர்கள் ஒன்பது பேரும் பலியாகியுள்ளனர். கடல் அனர்த்தத்தை அடுத்து மூன்று பிள்ளைகளினது பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலையை அறிவதற்காக முல்லைத் தீவிற்குச் சென்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# சந்தேகக் கோடு

மனிதனுக்கு அவன் வாழ்நாளில் எத்தனையோ நோய்கள் வந்து போவதுண்டு அவற்றுள் சில நோய்கள் மரணத்துக்கு அழைத்துச் செல்வதும் சில நோய்கள் வாழ்வைத் தக்க வைப்பதுமுண்டு அதை விட சமகாலத்தில் பல நோய்கள் புதிதுபுதிதாக உருவாகி வைத்திய வட்டாரத்தையும் உலகத் தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி வருவதும் நாம் அறி யாததொன்றல்ல. ஆனாலும் அன்று முதல் இன்று வரை தீராத நோயாகவும், சிகிச்சைக்குப் பலனளியாத நோயாகவும் சந்தேகம் என்ற நோய் குடும்பங்களையும் ஏன் உலகையும் உலுக்கி விடுவது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. ஆனாலும் இன்று இதன் வேகமும் தாக்கமும் யாழ்ப்பாணச் சமுதாயத்தை மேலும் மேலும் துன்புறுத்தி வருகின்றது. அதனை அறியாமலோ என்னவோ கவிஞர் ஒருவர் சந்தேகக் கோடு அது சந்தோஷக் கேடு என்று பாடியுள்ளான். எனவே இந்நோயைச் சமூகத்திலிருந்தும் வீரட்ட வேண்டுமேயன்றி இதற்குச் சமூகமும் சேர்ந்து தூபமிடு வது பொருத்தமானதொன்றல்ல. இன்று இந்நோயின் தாக்கம் பாடசாலைகளிலேயே கூடுதலாக வலுவடைந்து வருகின்றமை சிலாகிக்கத்தக்கது.

இன்று மாப்பிளைக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் இளம் பெண்களுக்கு வரன் தேடுவதில் பொறறோர்கள் படும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. இதனைமையப் படுத்தி தொழில் ரீதியில் பொருத்த மற்ற திருமணங்களே விரும்பியோ விரும்பாமலோ ஒழுங்கமைக்கப்படுகின்றன. பெற்றோரும் மகளுக்கு ஒரு வரன் கிடைத்து விட்டதாக எண்ணிப் பெருமித மடைவதோடு மனம் மகிழ்வடைகின்றனர். ஆனால் திருமணம் முடிந்து சில நாட்களுக்கிடையிலேயே கணவன் மனைவி மீது சந்தேகக் கோட்டைக் கீறி விடுகிறான். இந்நிலை பலரது வாழ்வில் தாக்கத்தையேற் படுத்துகிறது. இதனை நிர்ணயிப்பது பொருத்தமற்ற திருமணங்களே.

இன்றைய நிலையில் பல தனியார் நிறுவனங்களி லும் கூடுதலான ஆளணியினராக இளம் பெண்களேயுள் ளனர். இதனால் தொழில் ரீதியாக ஆண்களுக்கும் பெண் களுக்கும் இடையே இணக்கப்பாடுகள் தொடர்புகள் தொழில் ரீதியாக ஏற்படுவது இயல்பு. இந்நிலையி னால் மனைவி கணவன் மீது சந்தேகக் கோட்டைக் கீறி விடுகிறாள்.

இநநோய்க்கு மருந்தாக அமைவது புரிந்துணர்வு மட்டுமே. ஒருவரைப் பற்றி ஒருவர் சரிவரப் புரிந்து கொள்வாரேயானால் சந்தேகக் கோட்டை அழித்து சந்தோஷக் கோட்டைக் கீறி விடலாம். அதன் மூலம் நல்ல தோர் குடும்ப வாழ்வை ஏற்படுத்தி மகிழ்வான வாழ்வை அனுபவிக்க முடியும். சந்தோஷக் கேடான சந்தேகக் கோட்டை அழித்து இந்நோயை சமூகத்திலிருந்தும் துரத்துவோம்.

**மு.விக்னேஸ்வரன்**
**கோப்பாய்**

# பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர வேண்டுகோள்!

(கிளிநொச்சி)

புவி அதிர்வு பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர வேண்டுகோள் ஒன்றை கிளிநொச்சி தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் விடுத்துள்ளது.

இந்நிறுவனத்தின் தலைவர் க. செல்வநாயகம் வெளியிட்ட அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வரலாறு காணாத கடற்பூகம்பம் உயிரழிவையும், சொத்திழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. வாழ்விடங்களை இழந்தோர் நலன் புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எமது நிறுவனம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. பளை மத்திய கல்லூரி, புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை, பளை சோரன்பற்று கணேசா வித்தியாலயம், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் தங்கியிருப்போருக்கு எமது நிறுவனம் உதவி வருகின்றது.

கடந்த 26ஆம் திகதி மாலை விசுவமடுவில் வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது நிறுவனம் ஒருதொகுதி துணிமணிகள், பாயகள், உடுபுடவைகளை வழங்கியுள்ளது. கடந்த27ஆம் திகதி பளை மத்திய கல்லூரி, புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை, பளை சோரன்பற்று கணேசா வித்தியாலயம், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் தங்கியிருப்போருக்கு எமது நிறுவனம் உடுபுடவைகள், விரிப்புகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கியது.

கடந்த28ஆம் திகதி இடம்பெயராது பல இன்னல்களுக்கு மத்தியில அழிந்த தமது வாழ்விடங்களில் வாழும் கட்டைக் காடு, வெற்றிலைக்கேணி மக்களுக்கு எமது நிறுவனம் உணவுப் பொருட்களை வழங்கியது. யாழ். குடாநாட்டில் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு எமது நிறுவனம் நேரடி உதவிகளை வழங்கிவருகின்றது. புலோலி அமெரிக்க மிஷன் பாடசாலையில் தங்கியிருப்போர்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு பால்மா மற்றும் உணவுப் பொருட்களை கடந்த28ஆம் தகதி எமது நிறுவனம் வழங்கியுள்ளது.

மணற்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் தங்கியிருக்கும் மக்களின் உடைமைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்று ஒப்படைத்துள்ளோம். புலம்பெயர்ந்த தமிழுறவுகளின் தாராள நிதி உதவிகளை ஆதாரமாகக் கொண்டு எமது நிறுவனம் மேற்கூறிய பணிகளைச் செய்து வருகின்றது. வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் எமது நிறுவனம் இவ்வாறான பணிகளைச் செய்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. புலம் பெயர்ந்து வாழும் மக்கள் தாராள நிதியுதவி செய்வதற்கு கீழ்வரும் வங்கி இலக்கங்களை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி இலங்கை வங்கி இல. 4558 கிளிநொச்சி மக்கள் வங்கி 2945. (சு-4)

# உளநலம் சார் உதவித்திட்டங்களை ஒழுங்கமைக்க 'அனர்த்த உளநலப் பணிக்குழு' அமைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உள நலம் சார் உதவித் திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கென யாழ்.மாவட்டத்தில் உளநலத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வள ஆளணியினரை உள்ளடக்கியதான "அனர்த்த உளநலப் பணிக்குழு" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பு உள மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தலைமையில் உருவாக கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உளநலத்துறை மற்றும் சமூகப பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க் கிழமை சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் கலந்துகொண்ட திட்ட உருவாக்கல் ஒன்று கூடலிலேயே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது.

இயற்கை அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு அவசர உளநல முதலுதவிகளை வழங்குவதற்கும் ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிச் செயற்பாடுகளில் உளநலம் சார் உத்வித்திட்டங்களை இணைக்கவுமே இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம், மேற்படி பிரச்சினையினால் பாதிப்படைநத மக்களிற்கு நீண்டகாலத் திட்டங்களைத் தூரநோக்கில் அமுல்ப்படுத்தவும் இவ்வமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

அனர்த்த உதவிகளை மேற்கொண்டுவரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் பணியாற்றும் பகுதிகளில் உளநலத்துறை சார் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக 021-222 3338 என்ற தொலைபேசி இலக்கத்துடன தொடர்புகொண்டு இது தொடர்பான தகவலகள், உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பேராசிரியர் தயா சோமசுந்தரம் வேண்டுகோள விடுத்துள்ளார்.

இவவமைப்பின் செயற்திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும முன்னெடுக்க ஆயத்தமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# கடற்பெருக்கில் மூழ்கிப் பிழைத்தவர்கள் பலர் சுவாசநோயால் அவஸ்தைப்படுகிறார்கள்

## வவுனியா வைத்தியசாலை அத்தியட்சகர் தகவல்

(வவுனியா)

வெள்ளத்துடன் இவர்கள் அள்ளுப்பட்டுச் சென்றதினால் மேலதிக நீரைக் குடித்ததின் காரணமாக மூச்சுதிணறி மரணங்கள் சம்பவித்துள்ளன.

மாறாக தப்பியவர்களில் பலருக்கு நா சுவாசத் தொகுதிக்குள் புகுந்ததன் காரணமாக சுவாசத தொற்று நோய்கள் ஏற்பட்டு அவர்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டுள்ளனர் என வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை அத்தியட்சகர் பி. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

குழநதைகளுக்குரிய மருந்துகளுக்கு பொரிய ள வில் வன்னியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அனைத்து குடிநீர் கிணறுகளும் அசுத்தப்படுத் தப்பட்டுள்ளதினால் நீரை சுத்திகரிக்கக் கூடிய குளோரின் பெருமளவில் தேவைப்படுகின்றது.

தொற்று நீக்கி மருந்துகளும் அவசியமாகத தேவைப்படுகின்றது. உயிர் இறப்புக்கள் நேற்றுடன் நின்று விட்டாலும் இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் மேலும் ஏற்படலாம். அதனால்தான் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்படவேண்டும் இல்லாவிட்டால் மேலும் உயிர் இழப்புக்கள் வரலாம் என அவர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, நெடுங்கேணி வைத்தியசாலைகளில் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்க வவுனியாவிலிருந்து சென்ற வைத்திய அதிகாரி, அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து சேவையாற்றிவிட்டு வவுனியா திருமபிய பின் இந்தத்தகவல்களை அவர் வெளியிடடாா. முல்லைத்தீவில் மனித சடலங்களும் மிருகங்களுடைய சடலங்களும் கரைக்குவரத் தொடங்கிவிட்டது. சடலங்களை உடனுக்குடன் புதைக்காது விட்டால் மிகப்பொரிய தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்துவது என்பது பெரியதொரு பிரச்சினையாகவே காணப்படுகின்றது. இதற்கு நிறைய உதவிகள் வந்தால் மட்டுமே முழுமையாக செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# இராசி பலன்

**31.12.2004**
**(மார்கழி 16 , வெள்ளிக்கிழமை)**
**பஞ்சமி பி.இ . 5.50 மணிவரை**
**மகம் முன்னிரவு 11.28மணிவரை**
**இராகுகாலம் 10.59 - 12.29மணிவரை**
**சுபநேரம் 6.29 - 7.59 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், தாழ்ந்த சுபாவம், காரிய தாமதம். |
| இடபம் | தன்னம்பிக்கைக் குறைவு, தன விரயம், ரோக நிலை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | மனோதைரியம், போசன சுகம், நற்கீர்த்தி, முயற்சி கைகூடும். |
| கடகம் | கௌரவக்குறைவு, அதிக செலவு, போசன சுகக்குறைவு, விவாதம். |
| சிங்கம் | தெய்வ தரிசனம், வெகுமானம், மாதர் நட்பு, காரிய தாமதம். |
| கன்னி | சோம்பல் நிலை, தன விரயம், நித் திரைக் குறைவு, காரிய தாமதம். |
| துலாம் | தெய்வதரிசனம், பெருமையடைதல், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் உதவி. |
| விருச்சிகம் | பிரபுத்தனம், தெய்வசிந்தை, இஷ்டசித்தி, ஆரோக்கிய நிலை. |
| தனுசு | புதிய திட்டமிடல், உத்தியோக பலிதம், எதிர்பாராத செலவு, ஆரோக்கியக் குறைவு. |
| மகரம் | மனக் கவலை, பொருள் விரயம், சரீரப்பீடை, காரிய தாமதம். |
| கும்பம் | தெய்வ தரிசனம், மனோதைரியம், கீர்த்தி, பொருள் சேர்க்கை. |
| மீனம் | அதிக பிரயாசை, தேகநலன், மனமகிழ்ச்சி, சுப நிகழ்வு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# மருத்துவ வசதிகளை வழங்க அவசர உதவிகள் தேவை!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அகதிகளாக உள்ள மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்கும் முகமாக அவசர உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் தனிப்பட்ட முறையில் மருத்துவ உதவிகளை வழங்க முன்வருவோரும் இப்பணிகளில் ஈடுபடுவது வரவேற்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதால் நிவாரணங்களை எடுத்து வருவோர் அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நிவாரணங்களை எடுத்துவருவோர் 021-228-3947 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு நிவாரணங்களை ஒப்படைததல சம்பந்தமான விபரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை ஈச்சிலம்பற்று பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் நிவாரணப் பொருடகள் ஹபரணையில் வைத்தும் மஹிந்தபுர படைமுகாமில் வைத்தும் திசை திருப்பப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் திருமலைக்கு வரும் நிவாரணப் பொருடகள் திருமலைப் படைமுகாம் மற்றும் அரசாங்க அதிபர் ஊடாகவே விநியோகிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ற-4)

# சாவகச்சேரி கிராம அலுவலர்களுக்கு அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சவகச்சேரி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் இப பகுதியைச் சேர்ந்த சகல கிராம சேவை அலுவலர்களையும் இன்று (31.12.2004) பகல் 11 மணிக்கு பிரதேச செயலர் அலுவலகத்திற்கு அவசரமாக வருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (சு)

# கடற்கொந்தளிப்பின் காட்சிகளில் இருந்து...



பாதிக்கப்பட்டோருக்கு உதவும் முகமாக நடைபெற்ற மகாநாட்டின் போது...




மீட்புப் பணியில் இராணுவத்தினர்...



பாதிக்கப்பட்ட மணற்காடு தேவாலயம்...



சேதத்தைப் பார்வையிடுகிறார் இளம்பரிதி மற்றும் கஜேந்திரன் எம்.பி...







கிடைத்ததைப் பகிர்ந்துண்ணும் சகோதரர்கள்...



மீட்கப்பட்ட சடலங்கள் புதைக்கப்படுகிறது...





உறவினர்களால் பொறுப்பேற்கப்படும் சடலங்கள்...

# பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தவர்கள் அடிப்படை வசதியின்றி அல்லலுறுகின்றனர்

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

(மருதங்கேணி)

பளைமத்திய மகாவித்தியாலயத்தில் தங்கி உள்ளவர்களுக்கு இட வசதி போதாதுள்ளதாகவும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறையாவுள்ளதாகவும் அங்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நிலையத்தின் சேவையில் உணவு வகைகளை அனுப்பிவைக்கவும் ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார்.

சரசாலை வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் வரணி மகாவித்தியாலயம் போன்றவற்றில் தங்கியிருப்பவர்களுக்கு அப்பகுதி கிராமசேவகர்கள் ஊடாக ஊர் பொது மக்களும் உதவி செய்து வருவதுடன் டிறிபேக் கல்லூரி நிலையத்தில் இருந்து தேவையான உதவு பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

சரசாலை நிலையத்தை அப்பகுதி இராணுவத்தினர் தாம் பராமரிப்பதாகப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சாய் வீதி, லிகோரியார் தேவாலயத்தில் தங்கி உள்ளவர்களை தேவாலயத்தினரும் அதன் பங்கைச் சேர்ந்தவர்களும் பராமரித்து வருகிறார்கள்.

பொது மக்கள், வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து உடை, பால்மா, பிஸ்கெட் மற்றும் உணவுப் பொருட்ளையும் டிறிபேக் நிலையத்தில் வழங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சாவகச்சேரி இராணுவ அதிகாரிகள் வைத்தியசாலை மற்றும் டிறிபேக் கல்லூரியின் நிலையங்களுக்குச் சென்று தேவையான உதவிகள் வழங்குவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, கடற்பெருக்கினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவொரின் பெயர் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. அவை வருமாறு:

சிவானந்தம் - நிறோஜினி - (2 வயது, 6 மாதம்), சுப்பிரமணியம் ராஜினி - (வயது -4), சின்னையா - இலட்சுமிப்பிள்ளை - (வயது -74), சிவபாலசிங்கம் - பாலசுந்தரம் - (வயது - 28), முத்துலிங்கம் - சாந்தமலர் - (வயது - 52), த.சிவானந்தராசா - (வயது-49), வ.செல்வகுமார்-(வயது-37), சோபிகா- (வயது-7), தி. இராசேந்திரம் - (வயது-40), ச.மார்க்கிரேட் - (வயது -53), பு.வனிதா - (வயது-17), S.பரமானந்தம் - (வயது-62), க.குயில் - (வயது-32), ஆ.இருதயமலர் - (வயது-49), இ.வினோஜா- (வயது-49), K.சுதாசினி - (வயது-39), K.கலாமதி - (வயது-26), M.வசந்தமணி - (வயது-49), S.சோதிமலர் -(வயது-56) செ.அருள்தாஸ் - (வயது-32), சுரேந்திரன் -சுசீலா - (வயது-34),

இவர்களில் அதிகமானோர் செம்பியன்பற்று, தாளையடியைச் சேர்ந்தவர்கள். பலர் பதிவுகள் மேற்கொள்ளாது சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும் அறிய முடிகிறது. சிறிய காயம் உள்ளவர்களும் யாழ்.வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது தொடர்பாகக் கேட்ட போது தண்ணீர் மக்களை உருட்டி மரங்கள் கல்லுகளில் மோதியதால் பலருக்கு உட்காயங்கள் இரத்தப் பெருக்குகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அதனாலேயே அங்கு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-29)


# அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**
**2005ம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம், வாகன, மிருகவரி உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்**

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்களும், வியாபார வரிகளையும், வியாபார உரிமக் கட்டணங்களையும், தொழில்கள் மீதான வரிகளையும் எதிர்வரும் 31.03.2005ம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

**குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.**

**அத்துடன் தொழில் மாற்றம் செய்பவர்களும் புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும், தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.**

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**
**29.12.2004.** (C/929)

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**


## அனர்த்தத்தை அறிவிக்க அரசினால் முடியும்?

(கொழும்பு)

ஜப்பானிய ஜெய்கா உதவி நிறுவனம் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கிய புவியதிர்வை அளவிடக்கூடிய கருவி உரிய முறையில் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் பெருக்கு அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புகளை தவிர்த்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெய்க்கா நிறுனப் பேச்சாளர் நேற்று முன்தினம் இது தொடர்பாக தகவல் அளிக்கையில், தம்மால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உயர் தொழில்நுட்பம் பொருந்திய புவியதிர்வை அளவிடும் கருவியைப் பயன்படுத்தியிருந்தால் மூன்று நாட்களுக்கு முன்னரேயே புவியதிர்வு ஏற்படப்போவதை அறிந்தே பெருமளவு மக்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் எனத் தெரிவித்தார். (க-4)

## மா. சு. உ. பணிப்பாளர் தென்மராட்சிக்கு விஜயம்

(சாவகச்சேரி)

பிரதி மாகாணச் சுகாதாரப் பணிப்பாளரின் பிரதிநிதியாக உதவிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவபாதம் அண்மையில் தென்மராட்சிக்கு விஜயம் செய்தார்.

சாவகச்சேரி வரணி, சரசாலைப் பகுதிகளில் உள்ள வடமராட்சிப் பகுதி பாதிக்கப்பட்டவர்களது நலநோம்பு நிலையங்களுக்கு விஜயம் செய்த அவர் மக்களது சுகாதார நிலைமைகள், தேவையான வைத்திய உதவிகள் பற்றிக் கேட்டு அறிந்து கொண்டார். (க-29)

## பயிற்சி நெறி.

(யாழ்ப்பாணம்)

குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான 3 மாத துரித பயிற்சி நெறிக்காக ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தேர்வுக் கடிதம் கிடைக்கப்பெற்று பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாத கு.ந.உ.பதவிக்கான விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனால் 5 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் விண்ணப்பதாரிகளைக் கேட்டுள்ளார். (க-7)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது

(சாவகச்சேரி)

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து, கடந்த ஞாயிறு காலை இடம் பெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்து சாவகச்சேரிப் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளவர்களிற்கு சாவகச்சேரி நகரசபையினால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களின் உதவியுடன் 350 கிலோ கிராம் சத்துணவு உடனடி நிவாரணமாக வழங்கப்பட்டது. (க-47)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ யுனிசெப் முன்வந்துள்ளது

இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு யுனிசெப் அமைப்பும் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் இந்த உதவிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக யுனிசெப் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

படுக்கை விரிப்புகள் - 30 ஆயிரம், பாய்கள் - 30 ஆயிரம், துவாய்கள் - 30 ஆயிரம் ஆகியவற்றுடன் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக உணவு தவிர்ந்த நிவாரணப் பொருட்கள், கூடாரங்கள் மற்றும் மருத்துவ பொருட்கள் உட்பட 65 தொன் பொருட்கள் இரண்டு கப்பல்களில் கொழும்பு வந்து சேரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரான்சிலிருந்து மருத்துவர்கள் மற்றும் தாதியர் குழுவொன்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து 2 ஹெலிகொப்டர்களும், படுக்கை விரிப்புகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஜப்பானிலிருந்து வைத்தியர்கள் குழுவொன்று கொழும்புக்கு வந்துள்ளது. இவை அந்நாடுகளின முதற்கட்ட உதவிகளாகும். (க-4)


**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**சுன்னாகம்/உடுவில்/ ஏழாலை உப அலுவலகங்கள்**
**ஆதனவரி அறிவித்தல்கள் - 2005**

**1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச்சட்டம் இல.15 இன் பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**2005 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 2005.01.31 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும், ஒவ்வொரு கந்தாயத்திற்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக்கந்தாயத்துக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.**

**குறப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் 15%மும், ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறாந்துக் கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.**

**ஆதலினால் வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 2005.01.31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**
**29.12.2004.** (C/928)

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**



# நகரசபை, சாவகச்சேரி
## 2005ம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

**சாவகச்சேரி நகரசபையின் (255 ம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

**01.** **கட்டளைச் சட்டத்தின் 160 (3)ம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வாயொன்றினை 2005 ம் ஆண்டு முறையே மார்ச் 31, யூலை 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாயத் தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.**

**02.** **2005 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 15 % கழிவும் அனுமதிக்கப்படும்.**

**03.** **மேற்சொல்லப்பட்ட பந்தி 1ன் படி சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வதிவிடங்கள மீது 15 % மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20 % மும் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.**

**04.** **ஆதனவரி சார்பாக இடிந்த கட்டிடங்களுக்குரிய ஆட்சேபனைகள் யாவும் 31.01.2005 ம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும் படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.**

***நகரசபை அலுவலகம், சாவகச்சேரி,***
***29.12.2004.*** (C/927)

***செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.***


# "சுனாமி" யால் பேரழிவுக்குள்ளான நாட்டை மீளக்கட்டியெழுப்பும் ஆண்டாக 2005 - பிரகடனப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் அழிந்து போன எமது நாட்டினை மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் அரசியல்பீடம் வேண்கோள்விடுத்துள்ளது.

அக்கட்சி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசத்தை மீண்டும் கட்டியெழுப்பும் ஆண்டாக 2005 ஆம் ஆண்டைப் பிரகடனப்படுத்தப்படவேண்டுமென அரசாங்கத்துக்கு அக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கடல் கொந்தளிப்பினால் நாட்டில பலர் உயிரிழந்தும், காயமடைந்தும், காணமல்போயும் உள்ளனர்.

இது இலங்கையைப் பொறுத்தவரை ஈடுசெய்யப்படமுடியாத ஒரு பேரிழப்பாகும். எமது நாட்டைப் பாரிய இன்னல்களுக்கும் அழிவுகளுக்கும் உள்ளாக்கியுள்ளது.

இதில் இருந்து மக்கள் மீள்வதற்குக் குறைந்தது 4,5 வருடங்களாவது செல்லும். இந்த அழிவினை ஈடுசெய்ய சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# வர்த்தகமாகும் குளோனிங்



குளோனிங்முறைக்கு ஒருபுறத்தில் எதிர்ப்புகள் இருந்தாலும், குளோனிங் உயிரினங்கள் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன.

அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் குளோனிங்முறையல் பூனை உருவாக்கப்பட்டுள்ளது.

டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த பெண்மணி தான் 17 வருடங்களாக வளர்த்து வந்த பூனை மரணத்தறுவாயை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதைக் கண்டு கலஙகினார். எனவே, குளோனிங்முறையில் நிபுணத்துவம் பெற்ற வல்லுனர்களை நாடினார்.

இருபத்திரெண்டரை லட்சம் ரூபாய செலவில் அவரது செல்லப் பூனையிலிருந்து குளோனிங்முறையில் புதிய பூனையை உருவாக்கி, அதற்கு முந்தைய பூனையின் பெயரையே 'நிக்கி' என வைக்கப்பட்டது.

குளோனிங்முறை எதிர்ப்பு இயக்க ஆர்வலர்களிடமிருந்து தனது பூனையைப பாதுகாப்பாக வைக்கவேணடும் என்ற பிரியம் அநதப் பெண்மணகது உள்ளது. அமெரிக்காவில் குளோனிங்முறை தற்போது வர்த்தகமாகி வருகிறது.

இதற்கு முன்பு மாடு ஒன்று குளோனிஙமுறையில் 9 லட்சம் ரூபாய் செலவில உருவாக்கப்பட்டது. இவைதவிர எலி, முயல், குதிரை, பன்றி, ஆடு முதலியவையும் குளோனிங்முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

குளோனிங்முறையில் குரங்குக் குட்டியை உருவாககுவதற்கான தீவர ஆய்வுகளும் தொடர்கின்றன. மனிதக் கருவினை குளோனிங்முறையில் உருவாக்கும் ஆய்வு வெற்றிபெற்றுள்ளது.

அமெரிக்காவில் ஏராளமானோர் வளர்ப்பு மிருகங்கள், பறவைகளிடத்தில் அதிகப் பிரியம் காட்டுவதால் அவற்றின் வாழ்நாளுக்குப பின் அவற்றிலருந்து குளோனிங்முறையில் அதேமாதிரியான உயிரினத்தை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

குளோனிங்முறையில் உருவாக்கப்படும் உயிரினஙகள உடலியல ரதியில் ஏராளமான பிரச்சினைகளைச் சந்திக்கின்றன. எளிதில் நோய்வாய்ப்படுகின்றன. நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைவாகப் பெற்றுள்ளன. எனினும், குளோனிங்முறையல் உயிரினங்கள் உருவாக்குவது தொடரத்தான் செய்கிறது.

# தெரிந்துகொள்ளுங்கள்

♦விற்றமின் 'சி' உடலுக்குள் ஊடுருவி இருதய நோய் மற்றும் புற்றுநோயைத் தடுக்கிறது என்று ஓரிகன் மாநிலத்தின பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

♦சளி, இருமல் தொலலைகளுக்கு என்ன காரணம் தெரியுமா? காற்றில் உலவும் 200க்கும் மேற்பட்ட வைரசுகளில் ஏதாவது ஒன்றைச் சுவாசிப்பதன மூலமே சளி ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

♦ஒற்றைத் தலைவலியா, சும்மா இருந்து விடாதீர்கள். இந்த ஒற்றைத் தலைவலிதான் பக்கவாதத்திலும் படுக்க வைத்துவிடும். மற்றவர்களை விட ஒற்றைத் தலைவலி வந்தவர்களுக்குப் பக்கவாத ஆபத்து 2 மடங்கு அதிகம் என்று அமெரிக்க மற்றும் கனடா டாக்டர்கள் கண்டறிந்துள்ளனர்.

♦சிகரெட் புகைப்பவர்கள், குறைந்த பாதிப்புத் தரக்கூடியது, கூடிய பாதிப்புத் தரக்கூடியது என்று பிரித்துப் பார்க்காதீர்கள். எந்த வகை சிகரெட் பிடித்தாலும் ஆபத்துக் காத்திருக்கிறது என்று எசசரிக்கிறார்கள் அமெரிக்க டாக்டர்கள்.

# பேரறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் புலமை

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தவேளை ஒருநாள் ஒரு கல்லூரிக்கு விஜயம் செய்தார். ஆங்கிலப் பாடம் நடந்துகொண்டிருந்த ஒரு வகுப்பிற்குச் சென்று ஒரு மாணவனைக் கூப்பிட்டு A, B, C, D என்னும் நான்கு எழுத்துக்களும் வராத நூறு சொற்களைச் சொல்லுமாறு கேட்டார்.

குறித்த மாணவனும், வகுப்பு ஆசிரியரும் திகைத்தனர்.

நிலைமையைப் புரிந்துகொண்ட அண்ணா அப்பையனிடம் One, Two, Three என்று கூறிக்கொண்டுவருமாறு கூறினார். அப்பையனும் அவ்விதமே கூறிக்கொண்டு 'Ninety nine' என்று கூறியதும் அண்ணா 'Stop' என்று கூறி நிறுத்தினார்.

ஆம், அந்த நூறு சொற்களிலும் A, B, C, D என்ற நான்கு எழுத்துக்களும் இல்லையல்லவா!

அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் புலமைக்கு இதுவும் ஒரு சிறுசான்றாகும்.

தொகுப்பு:- ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.



# நத்தார் மர அலங்காரம் தோன்றியது இவ்வாறுதான்


நத்தார் பண்டிகையின்போது இல்லங்களிலும் வியாபாரக் கடைத் தொகுதிகளிலும் நத்தார் மரம் வைத்து அழகுபடுத்துவதை ஒரு பாரம்பரியமாகக் காண்கிறோம்.

இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது தெரியுமா?

இதன் அரம்ப கர்த்தாக்கள் ஸ்கண்டிநேவியர்கள்தான். ஆதிகால ஸ்கண்டிநேவயர்கள் மரங்களையே வழிபட்டு வந்தனர். இவர்கள் கிறிஸ்தவ மததததைப் பின்பற்றிய பின்னர் தமது தலைமுறை வழிபாடான மரவழிபாட்டை விட்டுவிடாமல் நத்தார் பண்டிகையின்போது மரங்களை அழகுபடுத்திக் கொண்டாடினர்.

இதுவே நத்தார் பண்டிகையின்போது நத்தார் மர அலங்காரமாக இப்போது கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 42



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 42**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப் பெயர்* :- ..............................
*முகவரி* :- ..............................
..............................
..............................

*இங்கே வெட்டுக* ------------------------------

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 05ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)புலம்பெயர்ந்து வாழ்வோர். (3)காய்களின் வளர்ச்சி (வ.இ). (4)இந்துக்களின் கிரியைகளில் முக்கியமாக இடம்பெறுவது (குழம்பியுள்ளது). (5) அவதார புருஷன் இங்கே சென்றார். (8)வாசனைத் திரவியங்களிலொன்று (குழம்பியுள்ளது). (10)கோழைத்தனத்தின் வெளிப்பாடு (வ.இ).

## மேலிருந்து கீழ்

(1)கோன் - இப்படியுமழைப்பர். (2)பணக்காரர் இவனைக் கண்டு அஞ்சுவர். (5)இதற்கு சந்திரனை உவமையாகச் சொல்வர். (6)ஆலயம் அமைக்கும் முறையினை விரிவாகக் கூறுவது (குழம்பியுள்ளது). (7)சொல் - இப்படியுமழைப்பர். (9)சங்கீதத்தில் இது அடங்கும் (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல.40 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.மனோதத்துவம் 4.விரோதி 6.சாந்தம் 8.சிறு 9.வாகனம் 10.சேவை

**மேலிருந்து கீழ்**

1.மனச்சாட்சி 2.தசாப்தம் 3.துறவி 5.திண்ணம் 7.நாகம் 10.சேறு

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- ம.கௌசிகா
கண்டிவீதி,
கொடிகாமம்.

**இரண்டாம் பரிசு** :- V.இளங்கோ
கோப்பாய்தெற்கு,
கோப்பாய்.

**மூனறாம் பரிசு** :- சி.ஜெயருக்ஷன்
இலங்கை வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. ஏ.ஜி.துரை, குருநகர். சி.வன்னியசிங்கம், கரவெட்டி. க.அ.மலர், யாழ்நகர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. E.யூஜினாமரியா, குருநகர். ச.வாசுகி, கோண்டாவில். கே.அரசேஸ்வரன், நல்லூர். இ.இளமதி, சுன்னாகம். கோ.ரகுவரன், கந்தரோடை. K.இராஜகோபால், தொல்புரம். கோ.லதா, கைதடி. அ.உதயசிறி, ஆனைக்கோட்டை. சி.விவேக், வியாபாரிமூலை. செ.இராசதேவி, கோப்பாய். தெ.சுஜீதா, சிததன்கேணி. க.காருணியா, யாழ்ப்பாணம்.

# இலட்சியங்களும் இலட்சங்களும்

சிறுகதை

நீர்வை இ.தியாகராசா

செல்வா எங்கள் உறவுப் பையன். மூன்று வருடங்களாக கனடா தேசத்தில் இருந்து கை நிறையச் சம்பாதித்துவிட்டு இரண்டு மாத லீவில் ஊருக்கு வந்திருக்கிறான். எங்கள் உறவுக்காரப் பையன் மட்டுமல்ல செல்வா, என்னுடன் ஒரே வகுபபில் அரிவரியில் இருந்து அட்வான்ஸ்லெவல் மட்டும் படித்து வந்தவன்.

படிப்பில், வகுப்பில் செல்வா எப்போதும் முதலாம் மாணவன. சிலருக்குப் படிப்பு வந்தால் விளையாட்டு சரிவராது. செல்வா அப்படியல்ல, இல்ல மெய்வல்லுனர் போட்டிகளிலும் சம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொள்வான். அதேபோல் பேச்சுப்போட்டிகளில் பரிசுகளைத் தனதாக்கிக் கொள்வான். சுருங்கச் சொன்னால் செல்வா ஒரு ‘ஓல்றவுண்ட்’ மாணவன்.

உறவுக்காரனாக இருந்த காரணத்தால் செல்வா சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கள் வீட்டுக்கு வந்து போவான். எனது பெற்றோா அவன் வருவது போவதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அம்மா மட்டும் ஒருமுறை சாடை மாடையாகச் சொன்னார்.

“சுசீ, செல்வா நல்ல பையன தான். என்றாலும் ஆண்களுடன் அளவுடன் நடந்துகொள்ளவேண்டும்”. அம்மாவின் கவலை நியாயமானதாகவே எனக்குப்பட்டது. என்றாலும் நான்,

“அம்மா நீங்கள் கவலைப் படாதீர்கள். செல்வா அப்படிப் பட்டவரல்ல நல்லவர்” என்று சொல்லிவைத்தேன்.

ஒருநாட் காலை செல்வா எங்கள் வீட்டிற்கு வந்தார். எனது அப்பா சந்தைக்குப் போய்விட்டார். அம்மாவோ உ்ணவுப் பொருட்கள் வாங்கச் சென்றுவிட்டார்.

“வீட்டில் யாருமே இல்லை” என்றேன்.

“தெரிந்துதான் வந்திருக்கிறேன்” என்று செல்வா சொன்னதும் எனது நெஞ்சு ‘திக்’ என்றது. அம்மா முன்பு சொன்ன புத்திமதி ஞாபகத்துக்கு வந்தது.

“என்ன! தெரிந்துதான் வந்திருக்கிறீர்களா?’ என்று கேட்டேன.

“ஆம் சுசீலா, உங்களுடன் தனிமையில் ஒரு விடயம் கதைக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன். இன்றுதான் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது...” என்று இழுத்தார்.

“என்ன சொல்லுங்களேன” என்றேன். என் உள்ளத்தில் இருந்த அச்சம் போக இப்போ ஆவல் மேலோங்கியது.

“சுசீலா, உங்களை நான் காதலிக்கிறேன்” இதைச் சொல்லி முடிக்குமுன்பே செல்வாவின் நெற்றி வியர்த்துவிட்டது. இதைக கேட்ட்தும் எனக்கோ திடீரெனச் சிறகு முளைத்து வானவீதியில் பறப்பதைப்போல இருந்தது.

செல்வாவைப் போன்ற ஓர் நற்குணமும், கெட்டித்தனமும் மிக்க இளைஞனால் விரும்பபபடும் பக்கியம் எனக்குக் கிடைதததையிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் என் மகிழ்ச்சியை வெளிக்காட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை. செல்வாவிடம் சில விடயங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினேன.

“செல்வா, உங்கள் அன்பு தூய்மையானது என்று நான் நம்புகிறேன். ஆனாலும் எங்கள் காதல் நிறைவேறுமா?”

“ஏன் சுசீலா சந்தேகப்படுகிறீர்? என்னில் உமக்கு நம்பிககையில்லையா?”

“உங்களை நம்பாமல் இல்லை செல்வா. நாம் உறவுககாரராக இருந்தாலும் எங்கள் அந்தஸ்தோ அதிக இடைவெளியானது. நீங்கள் பணக்காரர். என் தகப்பனார் ஓர் விவசாயி. நீங்கள் படிப்பில கெட்டிக்காரர். நாளைக்கு நீங்கள ஓர் டாக்டராகவோ, எஞ்ஜினியராகவோ அல்லது ஓர் கணக்காளராகவோ வந்தால்...”

“வந்தால் என்ன? உன்னை மறுத்து விடுவேன் என்று பயமா உனக்கு. சுசீலா என்னை நீ புரிந்துகொள்ளவில்லை. எனக்கு சில இலட்சியங்கள் இருக்கின்றன. நான் கல்யாணம் செய்யும்போது சீதனம் என்று எதுவுமே வாங்குவதில்லை. நகைகளைக் கூட நானே போட்டுச் செய்யவேண்டும என்று எண்ணியுள்ளேன். ஆகவே நான் சீதனம் இல்லை என்று உன்னை ஒதுக்கிவிடமாட்டேன சுசீலா”

செல்வா சொல்லச் சொல்ல எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. அம்மாவிடம் செல்வா என்னை விரும்புவதைக் கூறினேன். அம்மாவுக்கு ஒரே சந்தோசம் மகள் நல்ல இடத்தில் போகப் போகிறாள் என்று.

செல்வா எங்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அம்மா தானே முந்திக்கொண்டு தேனீர் கொடுப்பா. ஆனால் அப்பாவுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை.

“நமது தகுதிக்குக்கூடிய இடம் அது. நாளைக்குப் போகும் இடத்தில் சுசீலாவை அவ்வளவாக மதிக்கமாட்டார்கள்” என்பார்.

காலம் ஓடியது. செல்வா க.பொ.த.உயர்தர சோதனை எடுத்தார். திறமையாக சித்தியடைந்தும அவரால் பல்கலைக்கழகம் புக முடியவில்லை. தரப்படுத்தலே காரணம் என்று கூறினார். அது தான் உண்மையும்கூட. பலகலைககழகம் புகமுடியாததால் செல்வாவுக்குக் கவலை. எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம நானும் பெற்றோரும் ஆறுதல் கூறினோம். சில நாட்களில் செல்வா அந்தக் கவலையை மறந்து சகஜமாகப் பழகினான்.

ஒருநாள் மிகவும் உற்சாகமாக செல்வா எங்கள் வீட்டுக்கு வந்தான். முகத்தில் ஒரு பிரகாசம காணப்பட்டது.

“என்ன செல்வா விசேடம் மிகவும் சந்தோசமாக இருக்கிறீர்”

“சுசீ, ஒரு குட் நியூஸ். அப்பா என்னைக் கனடாவுக்குப் போகச சொல்கிறார். நானும் போகலாமென்று யோசிக்கிறேன்”

“ஓ.. அப்படியா! லட்சாதிபதியாக விரும்புகிறீர் போலை. அப்படியாயின் உங்கள் இலட்சியங்கள்....”

“என் இலட்சியங்களில் எப்போதுமே சந்தேகம் வேண்டாம். என் இலட்சியங்களை நான் எப்போதுமே மறக்கமாட்டேன். அதேபோலத்தான் உங்களையும மறக்கமாட்டேன்”

“உண்மையாகவா செல்வா? உங்களை நான் நம்புகிறேன்” எனக்கு ஒருபக்கம் ஆனந்தமாகவும் இன்னொரு புறம் அச்சமாகவும் இருந்தது.

செல்வா அடிக்கடி கொழும்புக்குப் போவதும் வருவதுமாக இருந்தார். இடைக்கிடை எங்கள் வீட்டுக்கு வந்தும் போனார். இப்படியாக ஆறுமாதங்கள் கரைந்தன. ஒருநாள் செல்வா சொன்னார்,

“கனடா செல்வதற்கு ஏஜன்சியிடம் காசு கட்டியிருக்கிறோம். அனேகமாக ஒருமாத காலத்துள் போகலாம் போல இருக்கிறது” என்றார்.

வெளிநாட்டுக்குப் போகப் போகிறவர் என்று ஒருநாள் விருந்து கொடுத்தோம். சாப்பாடு முடிந்ததும் செல்வா எங்கள் எல்லோருக்கும் சொன்னார்,


“நான் நாளை கொழும்புக்குப் போகிறேன் சரிவந்தால் அப்படியே போய்விடுவேன்”

“நான் அவர் பின்னால் படலை மட்டும் போனேன். படலையில நின்று என்னைத் திரும்பிப் பார்த்தார். என்னை அறியாமலே என் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் விழுந்தன.

“என்ன சுசீ, குழந்தைப் பிள்ளை போல அழுகிறீர். ஒரு வருடம் பல்லைக்கடித்துக்கொண்டிரும். அதற்குள் நான் நிரந்தரமாக ஒரு தொழிலை எடுத்துக் கொண்டு உம்மையும் அழைத்துக் கொள்கிறேன்” செல்வா இப்படி எனக்கு ஆறுதல் சொன்னார்.

“செல்வா, என்னை மறந்து விட மாட்டீர்களே!” எனக்கென்னவோ பயமாகத்தான் இருந்தது.

“சுசீ, எங்கே இருந்தாலும் என் இலட்சியங்களையும் உம்மையும் மறந்துவிடமாட்டேன்” செல்வா திட்டவட்டமாக உறுதியளித்தார். எனக்கு சற்று ஆறுதலாக இருந்தது.



அதுதான் செல்வாவும் நானும் கடைசியாகச் சந்தித்த சந்திப்பு. கொழும்புக்குச சென்ற செல்வா பயணம் நிசசயமாகிவிடடதால அப்படியே கனடா சென்றுவிட்டார்.

செல்வா கனடா சென்ற புதில் மாதம் மாதம் ஒரு கடிதம் போட்டுக் கொண்டிருந்தார். தன இதயத்துக் காதல் உணர்வுகள அத்தனையும் கொட்டிக் கொட்டி எழுதுவார். அவரின் ஒவ்வொரு கடிதமும் தேன் துளிகள் போல எனக்கு இனித்தன. நானும் அவறறிற்குத் தவறாமல் பதில் போடுவேன்.

ஆறு மாதங்களின் பின் ஒரு கடிதம் வந்தது. அதில் தான் ஓர் கம்பனியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டதாகவும், நல்ல சம்பளம் பெறுவதாகவும் எழுதியிருந்தார். ‘நான் இப்போது நிறைய உழைக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள் அதை அனுப்பிவைக்கிறேன்’ என்று கடிதத்தை முடித்திருந்தார்.

எனக்கு எதுவுமே வேண்டாம் செல்வா, உங்கள் காதல் மாறாத இதயமே வேண்டும் என்று பதில போட்டேன். செல்வாவிடமிருந்து மாதம் ஒருமுறை வந்த கடிதங்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வந்தன.... பின் அவை மூன்று மாதத்திற்கு ஒன்றாக, பின் எப்போதாவது ஒன்று வந்தது. ஆனால் நானோ தவறாது கடிதம் போட்டுக்கொண்டிருந்தேன்.

எப்போதாவது வரும் கடிதங்களில் தனக்கு இப்போ நேரம் அதிகம் கிடைப்பதில்லை என்று வரும். அப்படி வந்த கடிதங்களும கடைசியில் நினறு போயிற்று.

எனக்கு ஒரே கவலையாக இருந்தது. நான் கவலைப்படுவதைப் பார்த்து அம்மா சொன்னார்,

“வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு எவ்வளவு கஷடங்கள். அதிகாலையில் எழுநது வேலைக்குப் போனால் பொழுதுபடும் நேரம்தான் வட்டுக்கு வருவார்கள். பின் சமைக்க வேண்டும், சாப்பிடவேண்டும். அதுகளுக்கு நேரமெங்காலை கடிதம் போட. செல்வா அப்படி ஒன்றும் பிழையான பெடியனில்ல. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதை பிள்ளை”.

“எனக்கென்னவோ நம்பிக்கையில்லை. வெளிநாட்டுக்குப் போனவன் காசைக் கண்டவன எல்லாத்தையும் மறந்திடுவான. இல்லாட்டி அங்கைதான் யாரையும் கட்டிவிட்டானோ யாருக்குத் தெரியும்” அப்பா சொன்னார்.

அப்பா சொன்னதைக் கேட்க அழுகை வரும்போல் இருந்தது. ‘செல்வா அப்படிப்பட்டவரல்ல’ என்று என் மனதைத் தேற்றிக் கொண்டேன். அந்த நம்பிக்கையில் வாழ்ந்து வந்தேன்.

எப்படியோ மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. செல்வாவும் கனடாவால் வந்துவிட்டார். அதற்குள் எத்தனையோ மாறுதல்கள். செல்வாவின் வீட்டைச் சுற்றி இருந்த வேலிகள் அகற்றப்பட்டு சுற்றுமதில்கள் கட்டப்பட்டன. புதிய கேற் போடப்பட்டு தண்ணீர்த்தொட்டி, பைப் எல்லாம் போடப்பட்டன. பணக்காரர்களின் வீடுபோல அவர்கள் வீடுவளவு காட்சிதந்தன.

செல்வா ஊருக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. எங்கள் வீட்டுப் பக்கமே அவர் வரவில்லை. என் நெஞ்சில் இருந்த நம்பிக்கையும் அற்றுப்போய்விட்டது.

“சுசீ... சுசீ..” என்று வேலியால் யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. குசினியில் காலை ஆகாரம் செய்துகொண்டிருந்த நான் வெளியே வந்து பார்த்தேன். வேறு யாரும் இல்லை அது பக்கத்து வீட்டு மலர் அக்கா தான்.

“என்ன அக்கா....”

“ஒன்றும் இல்ல சுசீ, லீவாயிருந்தால் ஒருக்கா கிளினிக போய் வருவம் வாறீரே. ஒன்பது மணிக்குப் போனால் கணக்காயிருக்கும்” என்றார்.

“அதுக்கென்ன அக்கா போகும்போது கூப்பிடுங்கோ வாறன்” என்று சொல்லி விட்டு மீண்டும் குசினிகுள் போனேன்.

மலர் அக்காவின் கணவன் யாழ்ப்பாணத்தில் ஒரு கடையில் வேலை செய்கிறார். அவருக்கு லீவு கிடையாது. கிளினிக்குக் குப் போவதானால் மலா அக்கா என்னைத்தான் உதவிக்கு அழைப்பா. கிளினிக் செல்வதற்கு செலவாவின் வீட்டைத் தாண்டித தான் செல்லவேண்டும்.

அன்றும் அப்படியே அவர்கள் வீட்டின் வழியே போனபோது ஒருலொறி செல்வாவின் வீட்டு வாசலில் நின்றது. லொறியில் இருந்து பந்தல் செற், கதிரைகள் இறக்கிக் கொண்டிருந்தார்கள் லொறிக்குப் பக்கத்தே செல்வா நின்றுகொண்டிருந்தார்.

எங்களைக் கண்டதும் காணாததுபோல் லொறிச் சாரதியுடன் கதைப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தார். மலரக்கா விடவில்லை.

“ஓ.. தம்பி செல்வாவே, எப்ப கனடாவாலை வந்தனீர்?

(...9 பக்கம் பார்க்க)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 33



வாகீசகலாநிதி கி.வா.ஜ.அவர்கள் சலிம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், நாகாகோயில் ஆறுமுக நாவலர் முதலிய பல அன்பர்கள் வந்து தினந்தோறும் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் அன்போடு பேசினாலும் அந்தப் புகழைக் கேட்பதில் எனக்கு மிகுந்த வேதனையாகத்தான் இருந்தது.

பழநி காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரிய சுவாமிகள் மதுரை தெற்கு ஆவணிமூல வீதி திருஞானசம்பந்தர் மடத்தில் குண்டமண்டலங்கள் இட்டு யாகாதி கருமங்கள் செய்து எனக்கு அபிஷேகம் செய்தார்கள்.

ஆடிவீதியில் கடல் போன்ற மககள் திரளுக்கு மத்தியில் கனகாபிஷேகம் செய்தார்கள். அன்று மாலை பெரிய மலர்த்தேர் சிங்கரித்து காருகுறிச்சி அருணாசலம் அவர்களும், பொன்னுத்தாய் அம்மா அவர்களும், நாதசுரம் வாசிக்க, தேவாரம், திருப்புகழ், திருமுறைகள் முழங்க பிரம்மாண்டமான ஊர்வலம் நிகழ்ந்தது. எந்த விழாவிற்கும் அத்தனை கூட்டம் மதுரையில் வரவில்லையென்று மக்கள் பேசிக் கொண்டார்கள். இந்த ஊர்வலம் விடியற்காலை 3 மணிக்கு முடிவு பெற்றது.

### பொன்முடிப்பு

பொன்விழா நினைவு நிதியாக 44000 ரூபாய்க்கு ஒரு டிராப்டு எடுத்து மஞ்சள் பட்டுப் பையில் வைத்து என்னிடம் வழங்கினார்கள். நான் "எனக்குப் பணம் தேவையில்லை. நீங்களே வைத்துக்கொண்டு நல்ல காரியம் செயயுங்கள்" என்று டிராப்டை அவர்களிடம் திருப்பிக்கொடுத்து விட்டேன். பட்டுப்பையை மட்டும் விபூதி வைப்பதற்கு ஆகும் என்று எடுத்துக்கொண்டேன். வீட்டிற்கு வந்தவுடன் பண்ருட்டி சைக்கிள் ஷாப ஆர்.கே.முருகேசநாயுடு அந்த பட்டுப்பையை அவருக்கு அளிக குமாறு கேட்டார். அதனையும் அவரிடம் தந்துவிட்டேன். அந்தப் பொன் விழா நிதி இன்னும் பொன்விழாக் குழுவினரிடமே இருக்கின்றது. பொன்விழா மலர் ஒன்று வெளியிட்டார்கள்.

பொன்விழா ஊர்வலம் முடிந்தவுடன் அவசரமாக நீராடி வழிபாடு செய்து பொன்விழாக் காரில் புறப்பட்டு மாலை சென்னை வந்து சேர்ந்தேன். சென்னை மயிலாப்பூர் மாதவ பெருமாள் கோயில் ராஜகோபுரத் திருப்பணிக்காக பத்து நாட்கள் விரிவுரை செய்தேன்.

### மைசூர் மகாராஜாவின் சந்திப்பு

ஒருநாள் சென்னையில் தங்கியிருந்தபொழுது ராஜபவனத்திலிருந்து அப்பொழுது கவர்னராக இருந்த மைசூர் மகாராஜாவின் பி.ஏ.என்னுடன் பேசினார்.

மகாராஜா தங்களிடம் கேட்குமாறு கூறினார்; விநாயகப் பெருமானுடைய திருத்தலங்களில் சிறந்தது எது? என்று என்னை வினவினார்.

நான் "விநாயகருடைய திருத்தலங்களில் சிறந்தவை மூன்று. 1.பூனாவுக்கருகில் இந்திராணி நதிக் கரையில் தானாகவே முளைத்த ஒரு விநாயகருடைய கோவில்.

2. கும்பகோணத்தருகிருலுள்ள திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளையார் கோவில்.
3. காரைக்குடிக்கருகிலுள்ள மலையிலேயே பெரிய அளவில் செதுக்கியுள்ள பிள்ளையார்பட்டி என்ற கோவில்.

மகாராஜாவின் காரியதரிசி ராஜா உங்களைச் சந்திக்க விரும்புகிறார் என்று கூறினார். தேதியும், நேரமும் குறிப்பிட்டு, அதன்படி ராஜபவனம் சென்றேன். மகாராஜா அன்புடன் வரவேற்றார். சிறந்த நாற்காலியில் அமரச்செய்து என் அருகில் அமர்ந்தார். பெரிய வெள்ளி டம்ளரில் நல்ல சுவையுள்ள காபியைத் தன் கையினால் கொடுத்து உபசரித்தார்.

"நீங்கள் முருகனுக்கு அதாரிடி என்று கேள்விப்பட்டேன் முருகனை வணங்கினால் என்ன வரும்?' என்று கேட்டார்.

நான் "என்ன வரும் என்பதைப் பிறகு சொல்வேன். என்ன என்ன வராது என்பதை முதலில் சொல்வேன்' என்றேன். அவர் களுக்கென்று சிரித்துக்கொண்டார். நான் ஒன்று கேட்டால் இவர் ஒன்று சொல்லுகிறாரே என்று எண்ணினார் போலும்.

முருகனை வணங்கினால் வறுமை வராது. காலபாசம் வராது. இந்த இரண்டிற்குப் பதிலாக செல்வம் வரும். ஞானம் வரும். நோயும், துன்பமும் முருகடியார்க்கு நெருங்கமாட்டா.

"முருகா எனவுனை ஓதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியாதி அடைந்து நையார்
ஒருகால முந்துன்பமெய்தா பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே"

என்பது திருப்போரூர்ச் சந்நிதி முறையின் திருவாக்கு. இவ்வாறு சிறிது நேரம் பேசிவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பினேன்.

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சத்தியசபா என்ற நிறுவனத்தார் நடத்திய ராமாயண விரிவுரையைத் தொடக்கி வைக்க மைசூர் மகாராஜா மைசூரிலிருந்தே இதற்காக வந்தார்.

### ஹரிஜனப் பெண்ணின் அறிவு

நான் ஒருமுறை மதுரை மாவட்டத்திலுள்ள கம்பம் என்ற ஊருக்கு விரிவுரை புரியச்சென்றிருந்தேன். அதன் அருகிலுள்ள சுருளிமலைக்குச் சென்றேன்.

சுருளிமலை பல சித்தர்கள் வாழும் புனிதமலை. அங்கு முருகப்பெருமான் இயற்கையாக ஒரு பாறையின் கீழ் நின்று மாட்சியுடன் காட்சி தருகிறார். மேலே ஒரு சிறு நீர்வீழ்ச்சி. தரை முழுவதும் பாசை. கால் வைத்தால் வழுக்கி விழாமல் பிசின் போல் ஒட்டிக்கொள்கின்றது. ஆண்டவன் ஏகாந்தமாக இருக்கின்றார். உள்ளம் உருகி முருகப்பெருமானை வழிபட்டு அன்பருடன் திரும்பிவந்து கொண்டிருந்தேன். அப்பொழுது மாலை மணி 6.00இருக்கும்.

"சாமி! கொஞ்சம் பஞ்சாட்சரம் கொடுத்துவிட்டுப்போ!" என்ற ஒரு குரல் அதிர்வெடிபோல் எழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு இளம் ஹரிஜனப்பெண் புல் சுமந்துகொண்டுவந்து கொண்டிருந்தாள். அவள் வாயிலிருந்துதான் அந்த சொல் வெளிப்பட்டது.

திருநீற்றுக்கு பஸ்மம், விபூதி, இரட்சை, திருக்காப்பு, நீறு என்று பல பெயர்கள் இருக்கின்றன. பெரியவர்கள் திருநீறு கொடுக்கிற பொழுது பஞ்சாட்சரத்தைச் சொல்லித் தருவார்கள். அதனால் விபூதிக்கு, 'பஞ்சாட்சரம்' என்ற பெயரும் உண்டு. இந்த நுட்பமான விஷயம் அநேகருக்குத் தெரியாது. எப்படியோ அந்த ஹரிஜனப்பெண் வாயிலிருந்து இந்தச் சொல் வந்தது. அதிசயம் அடைந்தேன். அந்தப் பெண்ணின் கையில் திருநீற்றைக் கொடுத்து ஆசீர்வாதம் செய்தேன்.

### ஓர் அரிய கருத்து

நான் இளமையில் சென்னையில் விரிவுரை செய்து கொண்டிருந்தேன்; பாம்பன் சுவாமிகளின் சீடர் அத்யாச்சிரமி பாலசுந்தர சுவாமிகள் அடிக்கடி என்னுடன் வந்து பழகிக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் பாலசுந்தர சுவாமிகள் என்னை அழைத்துக்கொண்டு சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள ஒரு கிராமணியாருடைய இல்லத்திற்குச் சென்றார். அந்த கிராமணியார் அள்ளி அள்ளி வழங்கிறவள்ளல்.

பழமரத்தை நாடிப் பறவைகள் போவது போல் அந்தப் புண்ணியவானை நாடி பல சந்நியாசிகளும், வறியவர்களும் அணுகுவார்கள். அவர் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய், இருபதுரூபாய் என்ற தொகைகளைத் தன் கையில் வைத்துக்கொண்டு "எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுவார். அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். இதனை நான் கண்டேன். இதன் கருத்து எனக்குப் புரியவில்லை. அவரைக் கேளாமலே தெரிந்துகொள்ள வேண்டுமென்று நெடிது சிந்தித்தேன். ஒன்றும் விளங்கவில்லை.

அவரைப் பார்த்து "நீங்கள் கையில் பணத்தை வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ளுங்கள்! என்று சொல்கிறீரே! இதனுடைய கருத்து யாது" என்று கேட்டேன்.

அவர் "கொடுக்கிறவர்கள் கைமேலே இருக்கவேண்டும். வாங்குகிறவர்கள் கை கீழே இருக்கவேண்டும். அதனால் அப்படிச் செய்கின்றேன்" என்றார். அப்பொழுதும் எனக்குப் புரியவில்லை.

நான் திரும்பவும் அவரைப் பார்த்து "நீங்கள் தானே தருகின்றீர்! ஆகவே நீங்கள் தருகின்றவர். உங்களிடம் வருகின்றவர்கள் பெறுகின்றவர்கள். தருகின்ற தங்கள் கை தானே மேலேயிருக்க வேண்டும்" என்றேன்.

அவர் கூறுகின்றார் "என்னிடம் வருகின்ற அடியார்கள் பலப்பல திருத்தலங்கள் போய் வந்தவர்கள். பல தீர்த்தங்களில் முழுகியவர்கள். எத்தனையோ காலம் ஜப தவங்கள் செய்தவர்கள். அவர்கள் என்னிடம் வந்து, புண்ணியத்தைத் தருகின்றார்கள்.

(தொடரும்)

## தேடப்படும் உறவுகளின் விபரம்

பேரனர்த்தத்தினால் தத்தமது உறவுகளைத் தொலைத்து அவதியுறும மக்களுககு உறவுகளைத் தேடுவதற்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தொடர்பு மையத்திற்கு இதுவரையில் விபரங்களை தெரியப்படுத்திய வாகளின் விபரங்கள் பின்வருமாறு: இவர்கள் தொடர்பான விபரம் தெரிநதோர் உடனடியாக இல.106, 4ஆம் குறுக்குததெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அகதிகள புனர்வாழ்வு நிறுவனத்தின் உறவுகளைத் தொடர்பு படுத்தும தகவல் மையத்துடன் நேரிலோ அல்லது 222-2416 எனும் தொலைபேசி இலக்கத்தினூடோ அல்லது **Trro@Sltnet.lk** எனும் மினனஞ்சல் முகவரியூடோ தொடாபு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

* மரியஜெயசீலன் மரியநாயகி - அன்ரன் ஜெயக்குமார்
  பிலிப் மரியநாயகம் — அன்ரன் செபநாயகம்,
  இல. 3,மூன்றாம் ஒழுங்கை — அன்ரன் சாள்ஸ்,
  முத்தமிழ் வீதி, கொட்டடி. — அன்ரன் விஜித்தன்.
* திருமதி.வே.இலட்சுமிப்பிள்ளை - வே.நவரத்தினம்,
  பாட்டன் சந்தி, தும்பளை, — வே.சபாரத்தினம்,
  பருத்தித்துறை. — வே.ஜெயரத்தினம்
* வீரசிங்கம் ஜெயரஞ்சினி - நவரத்தினம் ஜெயரூபி
  உடுத்துறை வடக்கு, தாளையடி
* ரி.சின்னத்துரை - புலேந்திரன் பிறேமா குடும்பத்தினா
  உரும்பிராய் கிழக்கு,
  றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி,
  உரும்பிராய்.
* பி.டானியல் - பி.ஸ்ரான்லி குடும்பத்தினர்
  உரும்பிராய் கிழக்கு,
  றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி, உரும்பிராய்.
* சந்திரா 222 3401 - திரவியம் குடும்பத்தினர்
* அ.வசந்தகுமாரி - கனகலிங்கம்
  பருத்தித்துறை கடற்கரை வீதி,
* பிரான்சிஸ் சேவியர் செல்வநாயகம் - சூ.பேபிறெஜீனா
  சக்கோட்டை அல்வாய் மேற்கு.
* பாக்கியநாதன் றெமின்ரன் - இராயக்குட்டி சோபிதா-வயது 23
  3ஆம் கட்டை பொலிகண்டி - இராயக்குட்டி-வயது 19
  - ஆசீர்வாதம் பத்திநாதன்-வயது70
* முருகுப்பிள்ளை கண்ணகியம்மா - மு.கமல்ராஜ்
  இம்பருட்டி, பருத்தித்துறை
* ஸ்ரீஸ்கந்தராஜா இதயகுமாரி - குமரய்யா தங்கேஸ்வரி
  இன்பருட்டி, பருத்தித்துறை
* மாணிக்கம் இந்திராதேவி - தேவராஜா தேவராணி
  1ம் கட்டை, வியாபாரி மூலை, - தே.தேவகுமாரி
  பருத்தித்துறை - தே.தேவகுமார்
* மகேந்திரன் கௌசல்யா - பாலசிங்கம் யூட்டாஸ்
  ஆண்டாள் வளவு, கரவெட்டி வடக்கு - யூட்டஸ் கௌரி
  - கந்தசாமி ரூபா
* ஜஸ்ரீன் கொன்ஸ்ரின் மேரி ஜஸ்லின் -செபஸ்ரியாம்பிள்ளை பபி
  4ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை
* ய.ஜஸ்லின் 4ம் குறுக்குத்தெரு -யூ.சுலக்சனா வயது 1
* சி.பரிமேழலகன் - சின்னத்தம்பி குடும்பத்தினர்
  வராத்துப்பளை கற்கோவளம் - புஸ்பராசா சாந்தி குடும்பம்
* ப.மகேஸ்வரி - சந்திரா, ஜெகன் குடும்பம் (அல்லி)
  வராத்துப்பளை பருத்தித்துறை - மாணிக்கம், ஈஸ்வரி
* அன்ரனிமுத்து ஜசிந்தா - கந்தசாமி அற்புதம்
  இருதயக் கல்லூரி, தேவாலயம் — முருகேசு சின்னமலர்
* மைக்கல் கொலின் கொன்சியா - மை.மதுவந்தி
  குடாரப்பு, நாகர் கோயில், — மை.கொஸ்ரலா
  St.அன்ரனி கரவெட்டி (தற்போது) — மை.கொன்சன்
  மை.நிருஜன்
* பேதுருப்பிள்ளை அ.பிலோமினா - அ.ஜெயச்சந்திரன்
  மணல் ஒழுங்கை பருத்தித்துறை
  St.அன்ரனி கரவெட்டி (தற்போது)
* சூரசிங்கம் ரதிதேவி - மகாலிங்கம் தங்கத்துரை
  அல்வாய் வடக்கு, வியாபாரி மூலை — த.யமுனாராணி-வயது 21
  St.அன்ரனி கரவெட்டி (தற்போது) ராஜ்குமார் வயது 18, இந்து வயது 11
  த.சதீஸ்குமார் வயது 18, சந்திரகுமார், பூஜா வயது-3
* சூரசிங்கம் ரதி தேவி - மகாலிங்கம் அருமத்துரை, சறோ
  அல்வாய் வடக்கு, வியாபாரி மூலை
  St.அன்ரனி கரவெட்டி (தற்போது)
* ந.நவநீதன் - ந.விதுர்சன்
  குடாரப்பு, மாமுனை
  St.அன்ரனி கரவெட்டி (தற்போது)
* அ.சித்திரா - செ.பவி
  4ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை — நி.அந்தோனிக்கம் வயது 70
  St.அன்ரனி கரவெட்டி — கு.மலர் வயது 40
* அ.சித்திரா - ரி.செபஸ்தியாம்பிள்ளை வயது-56
  4ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை — செ.மணி
  St. அன்ரனி கரவெட்டி — தாசன்
* நவநீதன் — செ.ஞானமுத்து வயது-57
  குடாரப்பு — ஆசீர்வாதம் அந்தோனிக்கம்மா வயது 70
  St. அன்ரனி கரவெட்டி — ஞா.கிறிச்சன் வயது 9
* க.ரவிச்சந்திரன் -அ.மெரீனா வயது 18
  கற்கோவளம், புனித நகர் — சிம்சோ வயது 9
  (புலோலி மெ.மி.த.க.பாடசாலை) — கிரியோன்
  தற்போது
* செல்வராசா சறோஜாதேவி - அம்பிகாவதி இளவரசி (துர்க்கா)
  நுணாவில் மத்தி, சாவகச்சேரி
* அ.எட்வின் ராஜா - ச.சின்னமணி, ஜெயமணி குடும்பம்
* அ.நாதன் - டேவிற் மணி
  64, பழைய பூங்கா வீதி — டேவிற் சிம்சன்
  யாழ்ப்பாணம். — டேவிற் ஜான்சன்
  டேவிற் வனஜா
* அ.நாதன் - விக்கி
  64, பழைய பூங்கா வீதி - விக்கி ரேவதி
  யாழ்ப்பாணம். - கில்டா விக்கி
* இராசநாயகம் ரஞ்சினி - திருமதி ரஞ்சினி நவரட்ணம் குடும்பம்
  77/3 ஓடக்கரை வீதி, குருநகர் — மனோகரன் குடும்பம்
* சிவதர்சினி நடராஜா - முருகேசு நவரட்ணம்
  826/11 கே.கே.எஸ்.வீதி தட்டாதெரு - ந.ஜெயமலர்
  ந.பேபி
  ந.இராஜ்குமார்
  ந.இரவீந்திரகுமார்
  ந.தவக்குமார்
  ந.ரவிக்குமார்
* ரி.மனோகரன் - பொ.பிள்ளையான்
  மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி — பி.சறோஜினி
* குணரட்ணம் - ஐயாத்துரை தராபரன்
  ஆவரங்கால் — ஐ.ஜனாத வினோதினி
  ஐ.மோகனப்பிரியா
  ஐ.தாரகா பானுமதி — ஐ.ஹம்சத்வதனி (ற)

## நீ வாழ்க!!

சிறு வயதினிலே
சட்டி பானை செய்து
விளையாடினால் எம்மவர்கள்
எம்மைத் தண்டிப்பர்
ஆனால் - இன்று படித்தும்
பட்டம் பெற்றும்
வேலையற்று இருக்கும்
எமக்கு உந்தன்
உன்னதமான பணியையே
எடுத்துரைக்கின்றனர்
இன்று புரிகின்றது
உந்தன் பணியின் சிறப்பு!

தெ. திலீவ்,
சித்தன்கேணி.

## உழைக்கும் சிறு கரங்களே(ா)!?

பள்ளி செல்லும் வயதினிலே
பாழும் கஷ்டம் வந்ததாலோ
துள்ளித்திரியும் பிஞ்சே - வீட்டு
துயர் துடைக்கவென்றோ
அள்ளி மண்ணையெடுத்து விளையாடும் வயதில்
அழகான சிறு கலசம் செய்து
எள்ளி நகையாடும் இவ்வுலகில்
என்றோ பெரியவனாய் வர
சிறுபணம் சேர்த்து பாடம் பல கற்று
பெரும் பட்டம் பெற்று
பெரியவனாகி வீட்டை மட்டுமன்றி
நாட்டையும் பாதுகாத்திட
உழைக்கும் சிறு கரங்களே(ா)!?

பொ.புனிதன், வரியப்புலம்.

## ஒளி

இருளை நீக்கி ஒளியை
பரப்புவதற்காக - மக்கள்
கார்த்திகை விளக்கீட்டைக்
கொண்டாட - தம்பி
உன் வயிற்றுப் பசியை
போக்கவா விளக்குகளை
உருவாக்குகிறாய் - உன்
வாழ்க்கைக்கு எப்போது
கல்விமூலம் நிரந்தர
ஒளிகொடுக்கப் போகிறாய்...?


பா. அஜிதா, கரவெட்டி.

## அநாதை மைந்தன்

வறுமையின் பிடியிலிருந்து
வதங்கிய பச்சிளம் பாலகன்
விடிவை நோக்கிச் செல்ல
விழிப்புணர்வு பெற்று
தன் கைவண்ணத்தாலேயே
தானே உழைத்து வாழ எண்ணி
சுட்டி செய்யும் தொழியை
சுறுசுறுப்பாகச் செய்கின்றான் –அவன்
விடிவு பெற்று வாழ -
விழி திறவப்பா இறைவா.

திருமதி. S.பாக்கியநாதன்,
சங்கானை.

# மௌனத்தின்



## புரியும் நாள் எப்போது வரும்?

பாடசாலைக்குச் செல்லும் வயதிலுள்ள
பாலகர்களை வேலைக்கு அனுப்பும்
பாவிப் பெற்றோர்கள் ஒரு நேரப்
பாணுக்காக இவற்றைச் செய்வதை
பால் கேக் முட்டையை நாய்க்கூட்டும்
பார்வலர்கள் புரியும் நாள் எப்போதும்வரும்?

ச.சிவரூபன், சுன்னாகம்.

## தொழில்...!

படித்துப் பட்டம் பெற்று
பரிதவிக்கும் நிலையை விட
பாரம்பரியத் தொழிலில் ஈடுபட்டு
பசித்த வயிற்றை நிரப்புவது மேல்.

வவா, உடுவில்.

# தேடல்கள் – 41

## எமக்குள்ளும் பெருமிதம்

தேசத்தை நேசித்த தேசிய வீரர்
தீயாகச் சுடரும்
மாவீரர் நாளுக்காய்
சுட்டி வனையும்
சிட்டே.......
உன் உணர்வால்
எமக்குள்ளும் பெருமிதம்.

இ.நவகேதீஸ்வரன்,
சுன்னாகம்.

## நாளைய சரித்திரம்!

பள்ளிப் பருவத்தில் பேனா
பிடித்தெழுதும் கரங்கள்...
தஞ்சா ஊறு மண்ணெடுத்துப்
பிசைவதேனோ.....?
தலைகீழாய்ப் பிடித்திடும்போது
நேராய் எரியும் தீபமே - நீ
கரையாதே.....
காலங்கள் உனக்குண்டு
நாளைய சரித்திரம் மொழிவாய்.

இ.றொசான், வட்டுக்கோட்டை.

# மௌனத்தின் தேடல்கள் – 43



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். ***கிடைக்கவேண்டிய இறுதித் திகதி*** - 03.01.2005

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 43

**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.




## பெண்...!

அன்னையின் வடிவில்
வையகம் போற்றிடும் - பெண்ணாக
அன்பின் உறைவிடமாக
பொறுமையெனும் நகையணந்து
புன்னகை தவழும் முகத்துடன்
பெற்றாரும் மற்றோரும்
பெருமையுடன் பேசிடும்
குலமகளாய் வீற்றிருப்பாள்.



ந. யோகேஸ்வரி,
உடுவில்.

## காதல்

அம்மா தந்தது
அன்புக் காதல்
அப்பா தந்தது
அறிவுக் காதல்
அக்கா தந்தது
பாசக் காதல்
அண்ணா தந்தது
அரவணைப்புக் காதல்
ஆசான் தந்தது
கல்விக் காதல்
பள்ளி தந்தது
நட்புக் காதல்
பருவம் தந்தது
கவர்ச்சிக் காதல்
திருமணம் தந்தது
சீதனக் காதல்!

த. நா. பிள்ளையார்,
மூளாய்.

## காப்பாற்று..!



அன்பே......!
காந்தப்புலத்தில்
நின்று எழுதுகிறேன்
ஒருபுறம் பெற்றோரின்
இழுவிசை!
மறுபுறம் உனது
ஈர்ப்பு விசை!!
மொத்தத்தில் இருபுறமும்
தள்ளுவிசை!!!

என்னவனே!
விசைகளிலிருந்து காப்பாற்ற
விரைந்து வா......
சமயம் வேண்டாம்!
சாதி வேண்டாம்!
சடங்குகள் வேண்டாம்!
ஊர் உறவும் வேண்டாமே

எப்போதும் நீ வேண்டும்
உன் நிழலில்
நான் இருக்க.

வினோதரன்.

**நிம்மதி**

எத்தனை முறை உன்னை
அழுது அழைக்கின்றேன்!

**கண்ணீர்**

ஏழைப் பெண்ணின்
உடன் பிறந்த
சகோதரம்!

**பள்ளிப் பருவம்**

இளசுகளின் இதயங்களில்
நிறைந்திருந்த அந்தநாள்
பசுமையான காலம்!

**கடிதம்**

காதலனின் எண்ண - ஆழத்தை
காதலி அறிந்திடும்
சுவடி!

S.K.அயூரதி, சங்கானை.


## என்ன தான் செய்வது!

கண்டும் காணாதது போல்
போன என்னை
'திமிர்' பிடித்தவள் என்றனர்
கண்டதும் சிரித்துவிட்டுச்
சென்ற என்னைப்
'பெருமைக்காரி' என்றனர்
கண்டதும் கதைக்க வேண்டும்
என்றெனைப் பழக்கப்படுத்திக்
கொண்டேன்

நேற்று அவன் நீட்டிய
ஓலைக்கு கூறிய மறுப்பைக்
கேட்டதும் அவன் சொன்னான்
இது தானுன் முடிவென்றால்
என்னைக் கண்டதும்
ஏன் நீ சிரித்தாய்? கதைத்தாய்?
கண்டும் காணாதது போல்
போயிருக்கலாம் தானே....?

ஜெகசுபதா,
நல்லூர்.

## காதலிற்கு டை அடித்தாச்சு...



உன்னையே நான்
உள்நாட்டிலிருந்து
தினம் தினம்
எண்ணுகையில்
நீ
ஐரோப்பிய குளிரை
'கற்பனையில் அழைத்து'
உன்னைப் பழக்கப்படுத்த
பயிற்சி எடுக்கிறாய்....



உன் கருங்கூந்தல் விசிறும்
கவியழகை
காரமாய் நான் ரசித்த
பொழுதுகளை மறந்து
நீயின்று
நரையல் டையடித்து
ஐரோப்பிய சிற்றியில்
வெள்ளைக்காரி
வேசம் போட
ஒத்திகை பார்க்கிறாய்...
என் உள்நாட்டு சம்பளத்தில்
பங்கெடுத்துவிட்டு.
இன்று......
வெளிநாட்டு
நாணய மாற்றுவீதத்திற்கு
விலை போகிறாய்...!

சுமன்.

## காவியம்...

உனக்காகக் காத்திருந்தேன்
நீ வருவாயென்று....
தந்திதான் வந்தது
கடலோரக் காற்றில்
காவியமானதாய்!

S. கஜசங்கவி,
உடுவில்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் பல்வேறு உதவி

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்புக் காரணமாக அகதிகளான சிவில் மக்கள வடமராட்சிவடக்கு, சாவகசசேரி தெற்கு, சாவகச்சேரி மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 16பாதுகாப்பு நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு உணவு, உலர் உணவு, சுகாதார வசதிகள் உடபட வேறு முக்கியமான உதவிகளை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதியின் அறிவுரையின் பேரில் யாழ்.பாதுகாப்புத் தலைமையகத்தன் தளபதி மேஜா ஜெனரல் எஸ்.டி.தென்னகோனால் யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் 9இலட்சத்திற்கும் கூடுதலான பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பதற்காகக் கையளிக்கப்பட்டது.

அரிசி - 5000 கிலோ, பருப்பு - 1000கிலோ, சீனி - 100கிலோ, ரின் மீன் - 200, சோயாமீற் 200 கிலோ, தேயிலை - 100 கிலோ, செத்தல் -50 கிலோ, பால்மா 80 கிலோ, கொத்தமல்லி - 100 கிலோ, சாரம் - 1000, சாறி - 500, சிறுவர் உடை - 500, பெனியன் - 500, பாய் - 1000, பிளாஸ்ரிக் பங்கான் - 500, பிளாஸ்ரிக் கோப்பை - 500, பிளாஸ்ரிக் வாளி - 500 என்பன அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

வடமராட்சி வடககு பிரதேச செயலாளர் எஸ்.வசந்தகுமாரிடம 150 அரிசி மூடை, வடமராட்சி தெற்கு, சாவகசசேரி மேறகு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் 162 அரிசி மூடைகளும் பாதுகாபபு தலைமையகத்தினால் அகதிகளுக்குப் பங்கிடுவதற்காக கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

மணற்காடு கரையோரத்தில் வசிக்கும் கிராமங்களுக்குச செல்லும் பாதை இராணுவ இயந்திரங்களினால் செப்பனிடப்பட்டு துப்பரவு செய்யப்பட்டதுடன் அந்தக் கிராமத்தில் மீட்புப்பணிகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

அத்துடன் மரணமடைந்த மக்களின் பெறுமதியான பொருட்கள், தங்கநகைகள் என்பன இந்தப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டதுடன் அவை கிறிஸ்தவ மத குரு ஜேம்ஸ் காந்தனிடம் செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டன.

53ஆவது படைப்பிரிவின் கீழ் உள்ள வரணி மத்திய மகா வித்தியாலயத்தில் அகதிகளாக இடம் பெயர்ந்த 100 குடும்பங்களுக்கு 40 அரிசி மூடைகள் வழங்கபபட்டன.

யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கு பலாலி விமானப்படைத் தலைமையகத்தற்குக் கிடைக்கப்பெற்ற 1000 இறாத்தலுக்கும் கூடுதலான பாண அன்றையதினம் பிற்பகல் வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை உத்தர கடல் படையினரின முகாம், அழிந்துள்ள துறைமுகம் என்பன இராணுவ இஞ்ஜினியர் படையினரால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(ற)

# அத்தியாவசியப் பொருட்களை அனுப்புமாறு வேண்டுகோள்

(அம்பாறை)

இயற்கை அன்னையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப்பொருட்களை அனுப்பும் நல்மனம் படைத்தவர்கள், தேவைப்படும் பொருட்களை அறிந்துகொண்டு அவற்றை அனுப்பிவைக்குமாறு அம்பாறை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டடிருப்பவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்ட சடலங்களை மீட்பதற்கான உபகரணங்கள் தேவைப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கட்டட வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களை அனுப்பிவைக்குமாறு மீட்புப்பணியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் தற்காலிக வதிவிடங்களை அமைப்பதற்கான பொருட்களையும், சமையல் பாத்திரங்கள், பெண்களுக்கான உளளாடைகள், சிறுவர்களுக்கான பால்மா, மருந்துப்பொருட்கள் உட்பட உலர்உணவுப் பொருட்கள் ஆகியவற்றை அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ற-7)

## ஒன்றுகூடுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.இசற் நிறுவனத்தில் பயிற்சிபெற்ற சகல உளவளத் துணையாளர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி மு.ப 10 மணிக்கு யாழ்.கல்விவலயப் பணிமனையில் ஒன்று கூடுமாறு சுந்தரம் டிவிகலால கேட்டுள்ளார்.

(க)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இரு விமானங்கள் கொழும்பு வருகிறது

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இரண்டு சரக்கு விமானங்கள் கொழும்பை இன்று வந்தடையலாமென்று தெரியவருகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையினரால் சுவிஸ் நாடடில கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப்பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடவைகளுடன் இந்த இரண்டு விசேட விமானங்களும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையுமென்று அறியமுடிகிறது.


இந்த இரண்டு விமானத்தில் கொண்டுசெல்லப்படும் பொருட்கள் அனைத்தும உடனடியாக வடககுக் கிழக்கு மாகாணங்களிற்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாக அறியமுடிகிறது.

இதற்கான ஏற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புக் கிளை ஈடுபட்டுள்ளது.

தற்போது தாயகத்தில் ஏற்பட்டுள்ள அவலமான நிலைமைகளைக் கருத்தில்கொண்டு உடனடியாக உலகமெங்கும வாழும் தமிழமகககள உடனடியாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் கூட்டாக இணைநது சேவையாறறுமாறு வேண்டப்பட்டுள்ளார்கள்.

(க-4)







மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வருகை தருவதைக் கண்டித்து நேற்றையதினம் யாழ்.செயலகம் முன்பாக மககள் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். படங்கள்: அலுவலகச் செய்தியாளர்


# இதய அஞ்சலிகள்

## முத்துக்கிருஷ்ணன் அற்புததேவன் (மாயவர்)

(அச்சு இயந்திரப் பொறி வல்லுநர்)







அற்புததேவன் காங்கேசன்

அற்புததேவன் யதீசன்



பிரகலாதன் (கண்ணன்)

அன்றும் இன்றும் என்றும் எம் உள்ளத்தில்
நின்று நின்று நினைவலை கிளர்த்திடும்
அண்ணன் மாயவன் அரும் பெரும் நட்பினை
எண்ணி எண்ணி ஏங்குதே எம் மனம்!

அமரர்களான அன்பு நெஞ்சங்களுக்கு ஆத்மசாந்தியையும் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு மன ஆறுதலையும் அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கும்

வலம்புரிக் குடும்பம்.


# இலட்சியங்களும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதுசரி, கல்யாணம் போலை பநதல் வந்து பறியுது"

"ஓம் அக்கா எனக்குத் தான் வாற புதன்கிழமை"

"அதுசரி, சீதனம் எவ்வளவு? கனடா மாப்பிளளை என்று எககசசக்கமாயத் தந்திருப்பினம்..." மலரக்காவின் குரலில் ஏளனம் இருந்தது.

"அதிகம் இல்லை பத்து இலட்சம்தான். மற்றது வழக்கம் போலை நகை... வீடு வளவு" என்றான் செல்வா.

"நான் உதிலை ஒருக்கா கிளினிக் போட்டுவாறன். கல்யாண வீட்டுக்குச் சொலல மறந்து போகாதையும்"

"ஓம் அக்கா" என்று சொல்வி விட்டு செல்வா நின்றார்.

நான் அவர் முகததைக் கூடப் பார்க்க விரும்பாது எட்டப்போய் நின்றேன். மலரக்கா என் கிட்ட வந்ததும என் கணகள் பனித்திருந்ததைப் பார்த்து விட்டு,

"சசீ ஒன்றுக்கும் கவலைபபடாதையும். எல்லாம எனககுத் தெரியும். இக்கால இளைஞர்கள் இலட்சியம், இலட்சியம் என்று சொல்லுவார்கள். கல்யாணச் சந்தைக்குள் கால் எடுத்துவைத்ததும் இலட்சங்களைக் கண்டதும் இலட்சியங்களை மறந்துபோவார்கள்" என்றார்.

(யாவும் கற்பனை)

# மனிதாபிமான உதவிகளை புலிகளூடாக வழங்கி அரசு தன்நேர்மைக் குணத்தை மெய்ப்பிக்க வேண்டும்

## அனர்த்த உதவிகள் குறித்து ஈழவேந்தன் எம்.பி.கோரிக்கை

**சுனாமி பேரலைகளின் பேரழிவால் நம் மக்கள் ஏதுமற்ற ஏதிலிகளாக நிற்கின்றனர். பல்லாயிரக்கணக்கான நம சொந்தங்கள் நம்மை விட்டுப் போய்விட்டன. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் போரினால் தாங்கமுடியாத் துன்பத்தில் தத்தளித்துக்கொண்டு வாழ்ந்த இனம் நம்இனம். சமாதான காலத்தில் சிறிதே மூச்சுவிட்டுக் களைப்பாறிக்கொண்டிருந்த வேளையில் இயற்கையின் சீற்றமும் எம் மக்களைப் பேரழிவில் தள்ளிவிட்டது. இயற்கையின் சீற்றத்தால் அழிந்து போன எம்மக்களுக்காக கண்ணீர் விடுவது மனிதநேயம்தான், நாம் நம மனிதநேயத்தை, உயிர்பிழைத்தும் உயிர்வாழ வழியின்றித் துடிக்கும் மக்களின் கண்ணீரைத் துடைத்துக காப்பதன்மூலம் வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.**

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன தெரிவித்துள்ளார். இங்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கொடை, அளி, செங்கோல்உடையவனாக அரசன் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறினார். அந்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக நம் தமிழீழத் தேசியத் தலைவர் தாயுளளத்துடன் மீட்புப் பணிகளுக்கு முப்பது கோடி ரூபா வழங்கியிருக்கிறாா. பேரருள் படைத்த நம் தேசியத் தலைவரை அடியொற்றி மனித நேயமிக்க ஒவ்வொருவரும் அல்லலில் வாடும் எம் மக்களைக் காப்பாற்ற தம்மாலான அனைத்து உதவிகளையும் உடனடியாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்புகளூடாகச் செயயுமாறு மிகுந்த பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உலக சமுதாயம் இலங்கை அரசுக்கு மீட்புப் பணிகளுக்காகக் கொடுக்கின்ற தொகையினை இலங்கையில் பெருமளவு பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு உரியவாறு பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். இம்மீட்புப் பணிகளைத் தமிழீழத்தில் சிறந்த முறையில் மக்களுக்குத் தொண்டாற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின அரச கட்டமைப்பிடம் வழங்கித் தன்நேர்மையை இந்த இடத்திலாவது இலங்கை அரசு மெய்ப்பித்துக் காட்டவேண்டும் என்றும் நாம சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றுள்ளது. (ப)

### தமிழ் மாணவர் ஒன்றியம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பினால் கரையோர வாழ் மக்களிற்கு உயிரிழப்பு, உடமையிழப்பு போன்றவற்றால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை வடமராட்சி மணற்காட்டிற்கு விரைந்த தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையிலான குழுவினர் அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

பல சடலங்களும் மிக முககிய மான ஆவணங்கள் என்பனவும் மீட்கப்படடு மணற்காடு தேவாலய பாதிரியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப் பணியில் தொடர்ந்தும் மாணவர்கள ஒன்றியப் பிரதிநிதிகள அயராது கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் சேகரிக்கப்பட்டஒரு தொகுதி உணவுப பொருட்கள், ஆடைகள் என்பன வடமராட்சி மக்களுக்கு விநியோகிக் கப்பட்டன. மேலும் பெருநதொகையான உலர் உணவுப் பொருட்கள், பால்மா, நுளம்புத்திரி, மருந்துப் பொருட்கள், ஆடைகள் என்பனவும் முல்லைத்தீவுக்கு அனுப்பிவைக் கப்படவுள்ளன. (ற)

## உதவும் கரங்கள் திட்டம்

இயற்கையின் கோர அனர்த்தத்தினால் வடக்கு-கிழக்கின் கரையோரக் கிராமங்களில் மனித உயிர், உடைமை இழப்புக்கள் மிக அதிகம. அப்பகுதியில் மீட்புப் பணி தொடர்கிறது.

இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளனர். அவர்களுக்குப் பல்வேறு வகையான உதவிகள் தேவைப்படுகின்றன. எனவே உதவி செய்யவிரும்புவோர் பின்வரும் கணக்குகளில் தமது உதவு தொகையை நிலுவைப்படுத்தி அவசரப்பணிக்கு உதவுமாறு அகதிகள் புனர்வாழவு நிறுவனம் கேட்டுள்ளது.

கணக்கு இல:- 1060012503- **TRRO Ltd, Commercial Bank Ceylon Ltd, Jaffna**, கணக்கு இல:-1-0006-03-1207-0, **Chairmans Fund National Saving Bank, Jaffna**. (ற)

## மக்கள் அஞ்சத் தேவையில்லை

(கொழும்பு)

மக்கள் பீதியடையும் வகையில் காலநிலை மாற்றம் ஏற்படவில்லையென்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்களில் பருவப்பெயர்ச்சி மழை பெய்வது இயல்பான ஒன்று என்றும் வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் ஜெயதிலக பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கையை அண்டிய கடற்பகுதி சற்றுக்கொந்தளிப்பாகக் காணப்படுமென்றும் இதனால் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது எனவும் குறிப்பிட்ட அவர் கரையோர பிரதேசங்களில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வது உசிதமானது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, பருவப் பெயர்ச்சி காரணமாக இலங்கையின் மேற்கு வடக்கு-கிழக்கு பகுதிகளில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை நேற்று முன்தினம் இலங்கையை தாக்கக்கூடிய எந்த வகையான பூமி அதிர்ச்சியும் பதிவாகவில்லையென்றும் புவியியல் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-8)

# பழுதடைந்துபோன பிணங்களினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

## வைத்திய அதிகாரி சண்முகதாஸ் எச்சரிக்கை

(மருதங்கேணி)

இயற்கையின் கோரத்தாண்டவத்தில் வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைப்பிரதேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இப்பிரதேச நிலமை தொடாபாக மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சண்முகதாஸ் தெரிவிக்கையில்,

கடறபெருக்கின் பின் இவ்வைத்தியசாலை வளவு, கட்டிடங்கள் முழுவதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இப்பிரதேசமே மரண ஓலத்தாலும், அழுகையொலியாலும் நெஞ்சைப் பிளந்த வண்ணமிருந்தன.

கூடுதலாக வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களே பலியாகியமையால் சடலஙகளை இனஙகண்டபின உடுத்துறையில் தனியான மேட்டுப் பிரதேசமொன்றில் 1000க்கு மேற்பட்ட சடலங்களை அடக்கம் செய்துள்ளோம்.

இன்னமும் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. எனவே மீட்கப்படும் சடலங்களை உடனடியாக அடககம் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றும்.

எமது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் சடலங்களையும் உடனடியாக அடக்கம் செய்ய தயார் நிலையிலே உள்ளோம். ஏனெனில, சடலங்கள் இரண்டு மூன்று நாட்கள் சென்றுள்ளதால் அபாயம் விளைவிக்கும் தொற்று நோய்கள் ஏற்பட சாத்தியமுண்டு.

அதேவேளை, இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துவாழும் மக்கள். இங்கு குடிநீர் பிரச்சினை உள்ளது. இங்கே கிணறுகள் எல்லாம் கடல்நீர் மூடியுள்ளது. நலன்புரி நிலையங்களிலும சுகாதாரத்தைப் பேணி தொற்று நோயகளிலிருந்து மக்கள் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார். (ப-35)

## இலவச கலண்டர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் கொழும்பு நகரிலுள்ள ஆலயங்கள் மூலம் பக்தர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்ட சித்தஙகேணி பெரிய வளவு ஸ்ரீமகா கணபதிபிள்ளையார் கோவில் வார பஞ்சாங்கக் கலணடர் இம்முறை யாழ்.நகரிலுள்ள ஆலயங்களூடாக விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, காரைநகர் ஈழத்து சிதம்பரம் கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள்கோவில், மூளாய முத்துவிநாயகர் கோவில், வடக்கம்பரை அம்மன் கோவில், சித்தன்கேணி தனுவோடை சிதம்பரேஸ்வரர் கோவில், மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில், அராலி அம்மன் கோவில், சங்கரத்தை பத்திரகாளி கோவில், வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவல், வட்டு சித்தங்கேணி சிதம்பரேஸ்வரர் கோவில், சீரணி நாகம்மாள கோவில், மானிப்பாய மருதடி விநாயகர் கோவில், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில், வண்ணை வைததீஸ்வரர் கோவில், நீராவியடி ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி பிள்ளையார் கோவில், தாவடி சுதுமலை அம்மன் கோவில், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், நீர்வேலிப் பிள்ளையார் கோவில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில், நல்லூர் சிவன் கோவல் ஆகிய ஆலயங்களில் நாளை சனிக்கிழமை உச்சிக் காலப் பூஜை முடிவுற்றதும் பக்தர்களுக்கு இலவசமாக கலண்டர்கள் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

### இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி இறப்பு, பிறப்பு விவாகப பதிவாளர் காரியாலயம் சங்கததானையில் இருந்து சாவகச்சேரி பழைய இலங்கை வங்கிக்கு அருகாமையில் இருககும் புகையிரத நிலைய ஒழுங்கைக்கு இடமாற்றப்பட்டுள்ளதென்று பதிவாளர் மோகனராஜ் தெரிவித்துள்ளார். (க-29)

# விடுதலைப்புலிகள் 50 பாரவூர்திகளில் நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைப்பு

அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு 50 பாரவூர்திகளில் நிவாரணப் பொருட்களை தமிழீழ விடுதலைப்புலிகள் அனுப்பி வைத்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியிலிருந்து இந்நிவாரணப் பொருடகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களுடன் 50 வைத்திய நிபுணர்களும் அம்பாறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப பணிகளைத் துரிதப்படுத்தி நெறிப்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் விசேட செயலணி தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேச மட்டத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்செயலணி திட்டமிடல் மேம்பாட்டுச் செயலகத்தின் வழிகாட்டுதலுடன் அரச, அரசசார்பற்ற அமைபுக்களையும் உள்ளடக்கியதாகச் செயற்படும். நிவாரணப் பொருட்கள் வழங்குவது தொடர்பாக இதனால் மேறகொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

1) சமைத்த உணவுப்பொருள் வழங்குவதால் ஏற்படக்கூடிய சுகாதாரக் குறைபாடுகளைக் கருத்தில் கொணடு சமைத்த உணவுப் பொருட்கள் மற்றும் பொதிகளைச் சேகரித்தல் நிறுத்தப்படல் வேண்டும.

2) ஏனைய நிவாரணப் பொருள் விநியோகம் மையப்படுத்தப்பட்ட செயலணியூடாக ஒழுங்குபடுத்தப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

3) நிவாரணப் பொருள் விநியோகம், சேகரிப்பு என்பன பின்வரும் அடிப்படைகளில் வகைப்படுத்தப்படும்.

* உலர் உணவுப் பொருட்கள் அத்தியாவசிய சுகாதார மற்றும் மருந்து, குடிநீர் பொருட்கள், குழந்தைகளுக்கான பாவனைப் பொருட்கள்
* படுக்கை, உடுப்பு, நுளம்புவலை, ஏனைய பொருட்கள் - கூடார விரிப்பு, தற்காலிக கொட்டகை, வீட்டுப் பாவனைப் பொருட்கள்.
* மலசலகூட கட்டுமான பொருட்கள், குடிநீர் சேகரிப்புத் தாங்கிகள், பாரிய சமையற் பாத்திரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள்வைத்திய, மருத்துவப் பொருட்கள்.

4) சகல நிவாரணப் பொருட்களும் செயலணியினால் நெறிப்படுத்தப்படும் மத்திய நிலையங்கள் ஊடாகவே நெறிப்படுத்தப்பட்டு வழங்கப்படும்.

நிலையம் 1:

முல்லைத்தீவுப் பகுதிகளுக்கான பணிகளை முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகிலுள்ள மின்வாரியத்தின் வளாகததில் இயங்கும். இதற்குப் பொறுப்பாக திரு.ஈழமாறன் செயற்படுவார்.

நிலையம் 2:

வடமராட்சிப் பிரதேசத்திற்கான பணிகளை புதுக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள இணைப்பு அலுவலகம் மேற்கொள்ளும். இதன பொறுபபாளராக சுடர்மணி செயற்படுவார்.

5) இத்தொடர்பு இணைப்பாளர்களின செயற்பாடுகள்

* பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புள்ளிவிபரங்களை சேகரித்து அறிக்கையிடல், மக்களுக்கான நிவாரணத் தேவைகளைத் தொகுத்து அறிக்கையிடல்.
* நிவாரணப் பொருட்களை சேகரித்தலும் பற்றுச்சீட்டுக்களை வழங்குதலும்.

(க-4,9)

# தென்மராட்சி பாடசாலைகளில் 522 குடும்பங்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்நது தென்மராட்சிப் பாடசாலைகளில் 522 குடும்பங்களைச் சேர்ந்த 2905பேர் தங்கியுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், இடக்குறிச்சி சிறி சிவசுப்பிரமணிய வித்தியாலயம்,

இடக்குறிச்சி கிறிஸ்தவ தேவாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்,

கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றிலேயே இவ்வாறான குடும்பங்கள் தங்கியுள்ளன.

(ப-47)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்**

23

1. சிங்கை ஆரியன் (விஜயகூழங்கைச்சக்கரவர்த்தி)
2. குலசேகரசிங்கையாரியன்
3. குலோத்துங்கசிங்கை ஆரியன்
4. விக்கிரமசிங்கையாரியன்
5. வரோதயசிங்கையாரியன்
6. மார்த்தாண்ட சிங்கை ஆரியன்
7. குணபூஷண சிங்கையாரியன்
8. வீரோதய சிங்கையாரியன்
9. ஜெயவீர சிங்கையாரியன்
10. குணவீர சிங்கையாரியன்
11. கனகசூரிய சிங்கையாரியன் கி.பி.1440- 1450 (இதன் பின்னர் செண்பகப்பெருமாள் படைவரவு)

(யா.வை. வி.பக் 74-80)

சிலர் கைலாயமாலை, வைபவமாலை நூல்களுக்கு மாறாகவும், முன் நாளில் நடந்து முடிந்த உண்மைக்கு மாறாகவும் சிங்கையாரியன் காலமான கி.பி.948 இல் இருந்து அரசர் ஆட்சிக்காலத்தைக் கணக்குப்பண்ணாமல் கலிங்கமாகன் காலமான 1170 இல் இருந்து கணக்குப் பண்ணியும் ஒவ்வொருவர் ஆட்சிக்காலத்தையும் குறைத்து எழுதி இருக்கிறார்கள் இங்கே செண்பகப்பெருமாள் படைவரவு வரைக்குமுள்ள அரசர் அட்டவணைதான் காட்டியுள்ளோம். இங்கே ஆதிச்சிங்கையாரியனையும் அவன்மேற் சொன்ன 948 ஐயும் எடுத்துக் கொண்டு கணக்குப் பார்த்தால் (அக்கணக்கில் பூரணமாக ஆட்சி நிறைவேற முந்திக் கனகசூரியன் ஆட்சி நின்று விட்டதால் அவனை விட்டிட்டு) மொத்தம் 948-1440 ஆம் ஆண்டுவரை 492 ஆண்டுவரை 10 அரசர் ஆட்சி நடைபெற்றிருக்கிறது. இதனைப் பத்துப்பேருக்குப் பங்கிட்டால் ஒருவருக்குச் சராசரி 49.2 ஆகிறது. இது ஒருவன் ஆட்சி செய்யும் கணக்குக் கூடவாகிறது. இது ஒருவர் கணக்கிற்கதிகம் என்னையெனில் இராச்சிய வேலை மறுவேலை போன்று இராசகுமாரனுக்குப் படிப்பும் வேண்டும். போர்ப்பயிற்சி முதலியனவும் வேண்டும் ஆகையால் அவன் முடிசூடப்படும் வயது 30 வரை ஆக இருக்க வேண்டும் அப்பால் அவன்தன் இரகசிய பாரத்தை மகனுக்கு முடிசூட்டி ஒப்படைக்கும் காலம் 60ஆம் வயசுவரை ஆகவேண்டும் எனவே ஒருவர் ஆட்சிக்கு நாம் கணக்குப்போடும் தொகை 30 ஆக முடிகிறது இம்முடி சூட்டும் மரபோ வழக்கமோ முந்தையோர் முறையைப்பின்பற்றி மைந்தன் வழி மைந்தனாக நிகழுமாதலால் அவ்வகையிலும் இது சரியே.

அம் முப்பதின்படி இந்த 492 ஆண்டுகளுக்கும் 492 ஐ 30ல் வகுக்கப் 16 பேர் வரை இக் கணக்கில் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலே அட்டவணையில் 10 பேர்தான் தந்திருக்கிறார்கள். 6 பேர் மன்னர்கள் வரை இல்லை ஆனால் 35 வருட ஆட்சி ஒரு மன்னனுக்கு போடலாம் என்பாரும் உண்டு அவர்கணக்குப்படி பார்த்தால் 492 ஐ 35 ஆல் வகுக்க 14 சொச்சம் வருகிறது. ஆகையால் இக்கணக்கின்படி 14 பேர் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் இங்கே 30 படி 6 பேர் இல்லை 35 பேர்படி 4 பேர் இல்லை. ஆகை மேற்படி அரசர் இங்கே கண்ட கணக்கின்படி 4அல்லது 5 அல்லது 6 பேர் இல்லை.

இஃதென்னை இவ்வளவு வரையறவாகச் சொல்லுகின்றீர் என்பீரேல் இஃதுள்ளங்கை நெல்லிக்கனி எவ்வாறெனின் 948 என்னுந் தொடக்க ஆண்டு கைலாய மாலையால் உறுதிப்படுத்தப்பட்டது. 1440 என்னும் இறுதி ஆண்டு மகாவம்சம் குயிற்றூது என்னும் சிங்கள நூல்களாலும் வைபவமாலையின் ஆமோதிப்பாலும் பெறப்பட்டது. இன்னும் இஃதுறுதியாமாறு எங்ஙனமெனின் காட்டுதும்.

கி.பி. 1302 வரை வாழ்ந்தவனாகக் கருதப்படும் வரோதயன் ஆதிவிஜய கூழங்கையனின் பின்வந்த அவனது 5 ஆவது தலைமுறையினன் எனவே வரோதயன் உட்பட விஜயகூளங்கையன் தொடங்கி வரோதயன் , விக்கிரமன் , குலோத்துங்கன், குலசேகரன் விஜயகூழங்கையன் என ஐவர் பேசப்பட அந்நூல் சிறப்புரைகாரர் வேந்தனும் கோவுமாக இவன் முன்னவர் 11 பேரைச் சொல்லியுள்ளனர். இஃதென்னை? அப்பாயிரகாரர் வரோதயன் சிறப்பைப் பாடுவான் புகுந்து அவன் முன்னோர் சிறப்பையும் அவனுக்குப் பாடி அணி செய்வான் செய்தனர் எனவே பெயர் அறிந்தார் ஐவர் பெயர் அறியாதோர் அறுவராக இவ்வறுவரையும் பிறர் இதுவரை எடுத்துக் காட்டவில்லை இவ்வாறு வரும் விஜயகூழங்கைக்குப் பின்வரும் வரோதயனுக்கு முன்னராவார் எனவே இனிமேல் விஜயகூழங்கைக்குப் பின்னும் வரோதயனும் முன்னும் உள்ள நாம 6 பேரைச் சேர்த்துச் சிங்கை ஆரியர் அரசனுடன் ஆவலியைக் கூட்டிக் கொள்க. அவ்வறுவர் பெயரும் பாயிரத்தில் சொல்லப்பட்ட வேந்தன், கோவென்று பொதுப் பெயர்களால் தெரியப்படுகிறதன்றி அவர்கள் சிறப்புப்பெயர் சொல்லப்படவில்லை.

ஆதிச்சிங்கை ஆரியன் தொடக்கம் சங்கிகுமரன் இறுதியாக இருபதின்மாவரை ஆட்சிபுரிந்திருக்கின்றனர். ஆதிச்சிங்கையாரியன் தொடக்கம் கனக சூரியன் முதல் ஆட்சிபுரிந்த காலம்வரை நாடோ நகரோ எந்த மாற்றான் படை எடுப்புக்கும் இக்காலம்வரை நாடோ நகரோ எற்த மாற்றான் படை எடுப்புக்கும் இலக்காகாமல் இராச்சியபரிபாலனம் போயிருக்கு இப்பிரிவு 1ஆம் பிரிவு அப்பால் சிங்களப் படை எடுப்புத் தொடக்கம் போர்த்தர்படை எடுப்பு வரையும் உள்ள காலம் இரண்டாம் பிரிவு. போர்த்தர் படை எடுப்புத் தொடங்கி கடைசி அரசன் வரையுமுள்ள காலம் 3ஆம் பிரிவென்றுங்கொள்க.

### முன்னர் காட்டப்பட்ட தமிழ் அரசர் 1ஆம் பிரிவினர்

இரண்டாம் பிரிவில் அமைப்பவர்கள் தான் செண்பகப்பெருமாள் ஆட்சியின் பின் அரசாண்டவர்கள் அவர்கள் கனகசூரியன் கி.பி. 1467 , பரராசசேகரன் 1478 , சங்கிலி கி.பி. 1519

3ஆம் பிரிவிலே போர்த்துக்கேயர் மேலாட்சியிலே அமைவோர் புவிராசபண்டாரம், காசிநயினார், பெரியபிள்ளை

2ஆம் புவிராசபண்டாரம் எதிர் மன்ன சிங்கம் , அரசகேசரி, சங்கிலி குமரன் (AJ.பக் 370-374)

இவர்கள் 1658 வரையும் சுதந்திரமாக ஆட்சிபண்ணினர் அப்பால் போர்த்துக்கேயர் ஆட்சியில் கி.பி. 1658 வரையும் நிகழ்ந்தது.

சோழ குமாரன் ஆதிச்சிங்கையாரியன் தான் கி.பி. 948இல் அத்தலைநகரைக் கட்டினான் என்று நாம் சொல்லுகிறோம். இல்லை கலிங்கமாகன் தான் 13ஆம் நூற்றாண்டில் அத்தலைநகரைக் கட்டினான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இது பிழை என்று விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் சொல்லும்படி சிங்கை ஆரியரின் 300 ஆண்டு சரித்திரம் இல்லை. 300 ஆண்டு முற்பட்ட பெருமையும் இல்லை இதுமட்டுமல்ல கலிங்கமாகன் வந்ததற்கோ வாழ்ந்ததற்கோ தலைநகர்கட்டியதற்கோ செங்கோல் செலுத்தியதற்கோ எந்தச் சிறுவகையான ஒரு துப்பும் துலங்கவில்லை. ஆகையால் அவனல்ல இம்முதல்வன் வைபவமாலை, கைலாயமாலை இவனைப்பற்றி ஒரு வாத்தையும் சொல்லவில்லை. (தொடரும்)

---

## திருத்திய பின்னுறுதித் தீர்வை

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

லொயலா செல்வச்சீராளன்,
இல. 41, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

*வழக்காளி*

வழ.இல,மணநீக்கம்/277 *எதிராக*

லொயலா செல்வச்சீராளன் பெண்
பிறின்சியா, வயா அன்ரோணியா
வெளிசியானோ 110
90100 பலர்மோ பா
இத்தாலி.

*எதிராளி*

இவ்வழக்கு 2004ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. இ.த. விக்னராஜா அவர் கள் முன்னிலையில் வந்த போது எதிராளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு. ந.ரவிராஜ் நகர்த்தல் பத்திரம அணைத்து இவ் வழக்கை ஆதரிக்க கூப்பிடுமாறு கோரியதற்கு அமைய கூப்பிடப்பட்டு எதிராளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி மன்றுக்கு சமர்ப்பணங்களை சமர்ப்பித்த பின்னர் மன்று எதிராளியின் பதிவு பெற்ற சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை வழக்கேட்டுடன் பரிசீலித்த போது எதிராளியால் மன்றுக்கு அணைக்கப்பட்ட 30.4.2004 ஆம் திகதி கொண்ட மறுமொழியிலும் 27.9.2004இல் இவ்வழக்கில் ஒருமுக விளக்கத்தின் போது எதிராளி மன்றுக்கு அளித்த சாட்சியத்திலும் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் பிறந்த பிள்ளைக்கு ரூபா இருபது லட்சம் நிரந்தரப் பிரிமனைப் பணம் என்றும் மறுமொழியில் எதிராளிக்கு நிரந்தரப் பிரி மனைப பணம் ரூபா இருபது லட்சம் என்றும் எதிராளியின் சாட்சியத்தில் இருபது லட்சம என்றும் இருப்பதையும் மன்றினால் 27.9.2004இல் வழங்கப்பட்ட ஒருமுகத் தீர்ப்பில் எதிராளிக்கும் எதிராளியின் குழந்தையான ஜென்சனுக்கும் நிரந்தரப பரிமனைப் பணமாக ரூபா.250,000/-செலுத்த வேண்டும் என்று காணப்படுவதையும் கவனத்தில் எடுத்து 27.9.2004இல் வழங்கிய தீர்ப்பில் இருபது லட்சம் என்பதற்குப் பதிலாக ரூபா. 250,000/- ஒருமுகப் பிழைப்பாடாக குறிப்பிடப்பட்டுளளது. என்பதையிட்டு மன்று திருப்திப்படுவதால் குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 739ற்கு அமைய மன்றின் தற்துணிவு அதி காரத்தைப் பிரயோகித்து 27.9.2004இல் மன்றினால் எதிராளியின் சாட்சியத்தின் படி வழங்கப்படட ஒருமுகத தீர்ப்பில் எதிராளிக்கும் எதிராளியின் பிள்ளைக்கும் நிரந்தரப் பிரி மனைப் பணமாக வழக்காளி ரூபா. 250,000/- செலுத்தவேண்டும் என்று இருப் பதை எதிராளிக்கும் பிள்ளை ஜென்சனுக்கும் வழக்காளி நிரந்தரப் பிரிமனைப் பணமாக தலா ரூபா. இருபது இலட்சம் செலுத்த வேண்டும் என்றும் திருத்தி கட்டளையிட்டதற்கு அமைய, இவ்வழக்கு 2004 புரட்டாதி மாதம் மேற்படி மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் வந்தபோது எதிராளியும் எதிராளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.ந.ரவிராஜ் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளியின் சட்டத்தரணி திரு.ந. ரவிராஜ் அவர்கள் இவ்வழக்கில் சம்பந்தபபட்ட வழக்காளிக்கு குடாநாட்டில் வெளியாகும் வலம்புரி, தினக்குரல், உதயன், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் மூலம் 18.9.2004ஆம் திகதி விளம்பரப்படுத்தி பதில் சேவகம் செய்து அறிவித்தல் சேவிக்கப்பட்டு திரும்பல் திகதியாகிய இன்று மன்றுக்கு வழக்காளி சமுகமளிக்காமையால் இவ் வழக்கை மன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்க வேண்டுமென்றும் இன்று எதிராளி மன்றில் சமுகமாக இருப்பதால் எதிராளியின் ஒருமுக விளக்கத்தை நடாத்த அனுமதிக்க வேண்டும் என்றும் விண்ணப்பித்ததற்கு அமைய மன்றின் அனுமதியுடன் எதிராளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் எதிராளியின் மறுமொழி அணைக்கப்பட்ட எ1 என்ற ஆவணம் எதிராளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் வழக்காளியின் பிராது ஆகிய வற்றை மன்று வழக்கேட்டுடன் நன்கு பரிசீலித்து எதிராளி தனது மறுமொழியின் கோரிக்கையில் குறிப்பிட்டவற்றை மன்றிடம் இருந்து பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையில் 1989ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை வழக்காளி எதிராளியை வன்ம உறவறுப்பு புரிந்த குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது. வழக்காளி எதிராளிக்கு நிரந்தரப பிரிமனைப் பணமாக ரூபா இருபது இலட்சம் செலுத்தவேண்டும் என்று இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே பிறந்த ஆண்பிள்ளையான ஜென்சன் என்பவரின் பாதுகாப்பும் பராமரிப்பும் தொடர்ந்து எதிராளியிடமே இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தனது பிள்ளையான ஜென்சன் என்பவருக்கு நிரந்தரப் பணமாக ரூபா. இருபது இலட்சம் செலுத்தவேண்டும் என்று இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது. இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி வழக்காளிக்கு குடாநாட்டில் பிரசுரிக்கபபடும் வலம்புரி, தினக்குரல், உதயன், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி பதில் சேவகம் செய்த திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் வழக்காளி இப் பின்னுறுதித் தீர்வையை ஏற்று முற்றான தீர்வையாக்கப்படக் கூடாது என்பதறகு ஏதாவது காரணம் காட்டப்பட்டிராவிடத்து வதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும இப் பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9ஆம் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி

து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(9209)

---

# பாதிக்கப்பட்டோருக்கு உதவ விசேட கருமபீடங்கள்

(மருதங்கேணி)

வடமராட்சியில் கடல்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவி வழங்குவதற்காக மாநாடு அண்மையில் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தில் திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவநேசன்,கஜேந்திரகுமார், ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க வடமராட்சி பிரதேசத்தில் 15 பாடசாலைகளில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் உணவு போன்ற வசதிகளை வழங்குவதற்கான விசேட கருமபீடங்கள் வடமராட்சி,கரவெட்டி,மருதங்கேணிப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, கடற்கொந்தளிப்பால் வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமம் முற்றுமுழுதாக அளிக்கப்பட்டுவிட்டது. இப் பிரதேசத்தில் இதுவரை 45 சடலங்கள் மீட்கப்பட்ட போதும் 90 பேர்வரை மரணமடைந்தும் காணாமற் போயும் இருப்பதாக அப்பகுதி கிராம சேவையாளர் தெரிவித்தார்.

இப்பகுதியில் சவுக்கங்காடு போன்ற பிரதேசங்களிலும், கடலிலும் சடலங்கள் இருக்கின்றன. மக்களற்ற இப் பிரதேசத்தில் தொண்டர்களும் யாழ்.பல்கலைக்கழக மணவர் குழுவும் இணைந்து மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அத்துடன்,கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை வைத்தியசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. (து-35)

# அன்பு நிறைந்த உள்ளத்தில் தெய்வசிந்தை தானாக வளரும்

மனிதர்களை மனிதர்களாக வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது அன்பினால் உருவாக்கப்பட்ட சமயமாகும். வழி என்பது பாதை,



நெறி, மார்க்கம், முத்தி, விடுதலை, ஞானம் எனப்பல பொருள்படும். இவ்வுலகத்திலே மானிடப் பிறவியை எடுத்து மனிதர்களாகிய எமது இறுதி இலட்சியம் இறைவனை அடைதலேயாகும். அவ் இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களில் தலையானது அன்பேயாகும். இதனையே திருமூலரும்.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந் தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே"**

என்று கூறுகின்றார். வேற்று மதக் கொள்கைகளை முற்றிலும் வெறுத்து ஒதுக்காத, தான்தோன்றிய காலத்தைத் துல்லியமாக துணிய முடியாத சனாதன தர்மமாகிய இந்துமதம் அன்பினால் ஆண்டவனை அடிவணங்கியவர்க்கு அருள்மழை பொழிந்தமை அனைவரும் அறிந்ததே. அந்தவகையில் காட்டிலே வாழ்ந்த வேடுவ குலத்தவன், கடவுள் கண்களிலிருந்து ஓடுகின்ற குருதியைக் கண்டு

## வெள்ளிநற்சிந்தனை

பொறுக்காது தன் கண்ணையே கடவுளுக்கு காணிக்கையாக்கிய கண்ணப்பன் ஆறு தினங்களில் ஆண்டவனை அடைந்தான். பெண் என்ற நிலையினின்றும் பேய் என்ற உருவெடுத்து இறவாத இன்ப அன்பு வேண்டி நின்று தில்லையம்பல திருநடனத்தை இறைவன் அடியிலிருந்து கண்டு களித்த காரைக்காலம்மையார் இறைவனை அடைவதற்குக் கொண்ட மார்க்கம் அன்புவழியேயாகும்.

அன்பு என்பது முத்திக்குரிய ஒரு மார்க்கமாக பண்புகளை வெளிக் காட்டுவதற்கும், வரங்களைப் பெறுவதற்கும் அருளை வேண்டி நிற்பதற்கும் உறுதுணை புரிகின்றது. அந்த வகையில் சைவ, வைணவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் மீது கொண்ட அன்பின் காரணத்தினாலேயே அற்புதங்களை நிகழ்த்தவோ அல்லது திருமுறைப் பாடல்களை இசையுடன் பாடவோ வழியாக அமைந்தது. பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி வாங்கிய எம்பிரானை கூட இதயம் இளக வைத்தது. செம்மனச்செல்வியின் அன்பேயாகும். இன்னும் எமது வரலாறுகளை எடுத்து நோக்குவோமாயின் அனபிற்குக் கட்டுப்பட்டு அறநெறிபபடி ஆண்ட மன்னராட்சியிலேயே செங்கோ்ல் தலை தூக்கி நிற்பதைக் காணமுடிகின்றது. ஒரு மன்னன் அன்பிற்கு அஞ்சி ஆட்சி செய்கின்றான் என்றால் அதன் மறுதலை அவன் ஆண்டனை நேசிக்கின்றான் என்பதேயாகும். இந்த வகையில் வானத்திலே பறக்கின்ற ஒரு புறா வான்பரப்பிலே தன் இரைக்காக வட்டமிட்ட பருந்தைக் கண்டு பயந்து தன் காலடியில் சரணாகதியடைந்த ஒரு பறவைக்காக தன் தசையையே பருந்துக்கு விருந்தாக்கிய சிபியும், வாயிற் கடை மணி நடுநடுங்க ஆவின் கடைமணியுகுநீர் நெஞ்சுடத்தான் றன் அரும் பெறல்ப் புதல்வனை ஆழியின் மடித்தோனாகிய மனுவும் அன்பின் வழி வாழ்ந்தவர்களே. கொலைக்களத்திலே பலியிடுவதற்காக கட்டப்பட்ட பசுவை அவிழ்த்து விட்ட ஆபுத்திரனும், பசுவதைக் கஞ்சியே நாட்டைவிட்டோடிய ஞானப்பிரகாசரும் எமது சமயம் கூறும் அன்பின் படைப்புக்கள்.

தர்மங்கள் மலிந்து அதர்மங்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலே அன்பு என்பது கேள்விக்கிடமானது. போர் மேகங்கள் சூழ்ந்து குண்டுகள் இடியாய் பொழிந்து கொட்டும் குருதிமழை வன்பு நோக்கி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் எமது சமுதாயச் சூழலிலே ஆத்மீகம் நோக்கி நாம் ஆயத்தமாக வேண்டியவர்களாக உள்ளோம். அன்பு மன அமைதியைத் தரும், வெற்றியைத் தரும், வீரத்தைத்தரும், புகழைத்தரும், செல்வத்தைத்தரும், சித்தியைத்தரும், முத்தியையுந் தரும். இப்படிப்பட்ட அன்பை அடியோடு அழியவிடாது தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, தேசம் என பரந்து விரிந்த கிளைகளினூடு விருட்ஷமாக்குவோம். பஞ்சமா பாதகங்களை ஒழிக்கவும, நான்

**சுகந்தினி முருகேசு**

என்னும் அகங்காரத்தையும் எனது என்னும் மமகாரத்தையும் அழிக்கவும், வேற்றினத்தவன் வேறுநாட்டவன், வேறு மொழி பேசுபவன், வேற்று மதத்தவன் என்ற பாகுபாட்டை நீக்கி எம்முடையவன், என்னவன் என்ற உயரிய நோக்கை உருவாககவும் அன்பு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. ஒரு நாட்டில் அன்பு மலருமாகவிருந்தால் அங்கே நீதி தலை தூக்கும், நேர்மை சிறக்கும் அப்போது உயரிய ஆத்துமனமான ஜீவன்கள் ஜனனிக்கும். அந்த ஜீவனகளால் உயர் தெய்வசிந்தை உள்ளம் உள்ள சமூகமொன்று கட்டியெழுப்பப்படும் என்பது திண்ணம். எனவே நாம் உண்மை அன்பில் ஒன்றாகி உயரிய இறையை அடைவோம். □

## பொலிஸாரின் அனுமதி பெறவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவிகளை எடுத்துச் செல்வதற்கு பொலிஸாரின் அனுமதி பெறவேணடும் என்று இலங்கை பொலிஸார் திணைக்களம் அறிவித்துள்ளது.

நிவாரணப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் நிவாரணப் பொருட்களின் விபரங்கள் என்பன தமக்கு அறிவிக்கப்பட வேண்டுமெனவும் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்கள். (க-9)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவுடன் நடாத்தப்படும் திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ற)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவு பொருட்கள்

(சில்லாலை)

"சுனாமி" கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு அமைப்புக்களும் 27 ஆம் திகதி தொடக்கம் அத்தியாவசியப் பொருட்களை சேகரித்துவருகின்றன.

இந்த வகையில், வடலியடைப்பு, அரசடி, கலைவாணி ஆகிய சன சமூக நிலையங்கள் ஒன்றிணைந்து நிவாரணப் பொருட்களை மக்களிடம் இருந்து திரட்டி வருகின்றன.

சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, பால்மா வகைகளும் இருபதாயிரம் ரூபாய் பணமும் திரட்டப்பட்டு மிருசுவில் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன. (ற-58)

# பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தலா 10 மில்லியன் உடன் ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்ள அரசாங்கம் அவசர நிதி ஒதுக்கீடாக 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கிறது.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் செயலகமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக உதவி கோரும் பட்சத்தில் அதனையும் நிறைவேற்றத் தயாராக விருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவின் பேரிலேயே வடக்கு-கிழக்கு 70 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்துக்கும் 10 மில்லியன் ரூபா வீதம் வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு 70 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளவர்களின் அவசரத் தேவைகள் தொடர்பான துரித மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம் பாதிக்கப்பட்ட மாவட்ட செயலாளர்களைக் கேட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் அத்தியாவசிய உணவுப பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்துக்கு 78 தொன் அரிசியும், 10 தொன் பருப்பும், சுமார் 5 தொன் சீனியும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்துக்கு மேலும் 1705 தொன் அரிசியும், 165 தொன் பருப்பும், 51 தொன் சீனியும் அனுப்பி வைக்கப்படவுள்ளன என ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

(த-04)

## கடற்பிரதேசங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கபபட்ட கடற்பிரதேசங்களை பொது மக்கள் பார்வையிடச் செல்வதைத தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு செல்வதனால் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் பாரிய நெருக்கடிகளும், சிரமங்களும் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அவசரமாக வைத்திய சிகிச்சைகள் அளிக்க வேண்டியிருப்பதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# தொடர்பு கொள்க!

கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வருவோர் தத்தமது உறவினர்களைத் தேடுகின்றனர்.

இது குறித்து தகவல் தெரிந்தோரை 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

| தேடுபவர் | தேடப்படுபவர்கள் |
|---|---|
| ★ கு.வாணிஸ்ரீ - வத்திராயன், தாளையடி. | பு.ஜதா - வயது -15. |
| ★ கு.கலைமகள் வல்வெட் - டித்துறை | குணநாயகம் வனிதாமணி, குணநாயகம் கலைச் செல்வன், குணநாயகம் திருமகள். |
| ★ நாகரத்தினம் விஜிதா - உடுத்துறை, தாளையடி | நாகரத்தினம் விஜித்ரா. |
| ★ நாகரத்தினம் விஜயராஜ் - உடுத்துறை. | குடும்ப உறுப்பினர்கள். |
| ★ பாலச்சந்திரன் சுவர்ணா - உத்திராயன் வடக்கு, தாளையடி | சுரேந்திரன் - வயது-22 சுரேஸ் - வயது -15. |
| ★ பாலச்சந்திரன் சுகந்தி வத்தி-ராயன் வடக்கு, தாளையடி. | பாலச்சந்திரன் |
| ★ காந்தரூபன் விமலாதேவி - உத்திராயன் தாளையடி | பிரபாகரன், சுரேஸ்கரன். |
| ★ ச.தேவவனித்தா வத்திரா - யன் வடக்கு தாளையடி | தேவ அன்ரனி, தேவராஜன், தேவசுதன், தேவஜெனிற்றா, றெஜினா. (ற) |

# முஸ்லிம்களுக்கான உதவிகளை பள்ளிசம்மேளனத்திடம் வழங்குக

மனிதாபிமான உதவி கோருகின்றது பள்ளிவாசல் சம்மேளனம். காத்தான்குடிப் பிரதேசத்தில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்குமாறு காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளது.

காத்தான்குடிப் பிரதேசத்தில் கடல் அலையின் கொடூரத்தால் புதிய காத்தான்குடி, றிஸ்வி நகர், வதுறியா நகர், மஸ்ஜிதுல் அப்றார் பகுதி, மஸ்ஜிதுல் அன்வர் பகுதி, 2ம், 3ம் குறுக்குத் தெரு, விடுதி வீதி, நூறாணியா பகுதி, அப்துல் லத்திப் சின்னலெவ்வை மாவத்தை, கடற்கரையோர சகல பிரதேசங்கள், கர்பலா நகர், தக்வா நகர் ஆகிய பகுதிகளும் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதில் 10,000த்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலைகளிலும் பள்ளிவாசல்களிலும் தஞ்சம் அடைந்துள்ளதுடன், 100ற்கும் மேற்பட்டோர் இற்றை வரை கண்டு பிடிக்கப்படாமல் உறவினர் தேடி அலைகின்றனர். அழுகைக் குரல்கள் இன்றும் ஓயாத நிலையில் கட்டிடங்களுக்குள்ளும் கடல், ஆற்று வாவியிலும் ஜனா சாக்கள் நேற்றும் கரையொதுங்கிக் கொண்டிருக்கின்ற பரிதாப நிலை தொடர்கின்றது.

காத்தான்குடி முஸ்லிம் மக்கள் ஒனறியம், இஸ்லாமிய வழிகாட்டல நிலையம், முஸ்லிம் மக்கள் செயல் முன்னணி போன்ற அமைப்புக்கள் ஜனாசாக்களை மீட்கும் பணியிலும ஏனைய பணியிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரு கினறன.

நிவாரணப் பொருட்களை வழங்க விரும்புவோர் பள்ளிவாசல் சம்மேளனத்திடம் மாத்திரம் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரம் சரியான முறையில் வழங்குவதற்கு ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ப-4)

# அம்பாறையிலுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்கவில்லை

(அம்பாறை)

கடந்த ஞாயிறன்று ஏற்பட்ட இயற்கை அன்னையின் சீற்றப் பாதிப்புக்குள்ளான அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் கிராமங்களுக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

காரைதீவு, கல்லாறு, கோட்டைக் கல்லாறு, களுவாஞ்சிக்குடி, குருக்கள் மடம் போன்ற தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குப் போதிய நிவாரணப் பொருட்கள் கிடைக்காததால் அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் வேதனையடைந்துள்ளனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களை இடைவழியில் மறித்து அகதிகள் தங்கியுள்ள இடங்களில் உள்ளவர்கள் எடுத்துக் கொளவதால் உப்பகுதியில் உள்ள இக் கிராமங்களுக்கு நிவாரணப் பொருட்கள் சென்றடைவதில்லையெனத் தெரியவருகிறது. இங்கு ஒரு பார்சல் உணவுக்கு பலர் சண்டையிடுவதாகவும் கூறப்படுகிறது.

ஆதலால் நிவாரணப் பொருட்களை அனுப்புபவர்கள் எந்தெந்த இடங்களுக்கு பொருட்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. என்பதை ஊடகங்கள் மூலம் தெரிந்து கொண்டு அவ்விடங்களில் உள்ள நிவாரணப் பணியாளர்களுடன் தொடர்பு கொண்டு இடங்களை நிச்சயப்படுத்திப் பின் சென்றால் நிவாரணமின்றித் தவிப்பவர்களுக்கு நன்மை பயப்பதாக அமையும். (க-7)

அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்புழி - குறள்

வலம்புரி

# நிவாரணக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்கவேண்டும்

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவுக்கான நிவாரணப்பணிகள் நாலாபக்கமும் இருந்தும் வந்தவண்ணம் உள்ளன. சர்வதேச சமூகம் உட்பட நாட்டிலுள்ள அனைவரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அக்கறைகொண்டுள்ளமை மன ஆறுதலைத் தருவதாகவுள்ளது.

அதேநேரம் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சீராகக் கிடைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும். நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு அமைப்பும் சுயமாகச் செயற்படுமாயின் பாதிக்கப்பட்ட ஒருபகுதியினருக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்க இன்னொரு பகுதியினருக்கு எந்தக் கொடுப்பனவுகளுமே கிடைக்காமல்போகும் சந்தர்ப்பங்கள் உண்டு.

எனவே இதுவிடயத்தில் செம்மைப்படுத்தப்பட்ட திட்டமிடலும், முகாமைத்துவமும் தேவையானதாகும். அதேவேளை பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான ஒரு சீரான தகவல் சேகரிப்பும் முக்கியமானதொன்றாகும்.

யுத்தகாலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வு, உயிரிழப்பு, சொத்தழிவு ஆகிய இழப்புக்களான நிவாரணக் கொடுப்பனவுகளில் நடந்தமுறைகேடுகள், ஒழுங்கீனங்கள் யாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் ஒழுங்கான முறையில் தரவுகளைச் சேகரிக்காமையே ஆகும். குறிப்பாக அந்தந்த கிராமசேவையாளர்கள் தத்தம் பகுதிகளில் ஏற்பட்ட இழப்புகளை ஒழுங்கான முறையில் புள்ளிவிபர அடிப்படையில் சேகரிப்பதன் மூலம் நிவாரணக் கொடுப்பனவுகளில் ஒழுங்குபடுத்தலை - ஒரு நியாயத்துவத்தை ஏற்படுத்தமுடியும்.

மேலும் இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகும். உயிரிழந்த குடும்பங்களுக்கு அரச அதிபரினால் 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட போதிலும் அந்தத் தொகை போதுமானதல்ல என்ற உண்மை எல்லோராலும் உணரப்பட்டதொன்றே.

எனினும் உறவுகளின் உயிரற்ற சடலங்களை வைத்துக்கொண்டு அழுதுபுலம்பும் குடும்பங்களுக்கான உடனடிக்கொடுப்பனவான ஆகக்குறைந்தது 10 ஆயிரம் ரூபாவேனும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதுவிடயத்தில் யாருமே கவனம் செலுத்தாமை வேதனை தரக்கூடிய சம்பவம் ஆகும்.

அரசினால் உடனடியாக நிவாரணத்தொகை வழங்கப்படவில்லை என்ற காரணங்கள் இருப்பினும் ஏதேனும் மாற்றுவழிகளைப் பின்பற்றி அந்த உதவு தொகையை அதிகரித்திருந்தால் அது பாராட்டப்படக் கூடியதாக இருந்திருக்கும். அத்தகையதோர் சூழ்நிலை உடனடிச் சாத்தியமற்றதாக இருப்பினும் இனிமேலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கான நிதிக்கொடுப்பனவை விரைவுபடுத்துவது முதன்மைப் பணியாகும்.

இவையொருபுறம். மறுபுறத்தில் நிவாரணக் கொடுப்பனவுகளில் நிலவும் காலதாமதம் குறைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதுவிடயத்தில் அரசின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படவேண்டும். சர்வ தேச சமூகம் நிவாரணப் பணிகளை வழங்கி வருகின்ற போதிலும் அவை மக்களைச் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுமாயின் அதனால் எந்தப் பயனும் இல்லாமல்போவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

எனவே இந்தத் தடவையும் எந்தத் தடங்கலும் இல்லாமல் சர்வதேச சமூகம் வழங்கிய நிவாரணப் பொருட்கள் பாதிப்பட்ட மக்களைச் சென்றடைவதை உறுதிசெய்வது அனைவரதும் கடமையாகும்.

இங்கும் இன, மத, மொழி வேறுபாடுகள் தலைதூக்குமாயின் அத்தகையதொரு குறைகூறலுக்கு அரசு இடம்கொடுக்குமாயின் நிலைமை மிகமோசமாக மாறிவிடும் என்ற உண்மை உணரப்படவேண்டிய தொன்றாகும்.

இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனம் தமிழர், முஸ்லிம்களை சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் வகுத்து அவர்களுக்கான உரிமைகளைக் கூட வழங்கமறுத்து வருகிறது. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமானது இன, மத, மொழி என்ற பேதங்கள் எதனையும் பாராது மனித உயிர்களைக் காவுகொண்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டதன் மூலம் ஒரு உண்மையை உணர்த்தியுள்ளது. அந்த உண்மை இன, மத, மொழி கடந்த சமத்துவமாகும். இதனை அரசு உணர்ந்துகொண்டு சர்வதேச நிவாரண உதவிகளை பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் விரைவாக வழங்க வேண்டும்.

# பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச உதவிகள் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவிகளை வழங்கும் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச உதவிகளைப் பெறும் போது ஒழுங்கானதும் நியாமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய அத்துரலிய ரத்ன தேரர் நேற்று முன்தினம கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் பொருட்டு இயற்கை இடர் முகாமைத்துவ அதிகாரசபை நிறுவப்படவேண்டும். இடம்பெயர்ந்தோர் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ள இடங்களில் மலசலகூட வசதிகள் இன்மையால் அவர்கள் பாரிய சுகாதார அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

மற்றும் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை இனம் கண்டு உதவிகள் வழங்கப்படவேண்டும்.

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் உட்பட மருத்துவத் தேவைகள் அனைத்தையும் உடனடியாக வழங்கப்படவேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டார். (ற-4)

## வடக்கு-கிழக்கில் உள்ள மனித உரிமைகள் செயலகம் விடுக்கும் அவசர வேண்டுகோள்

(கிளிநொச்சி)

அணமையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்கள் அனைவருக்கும் உடனடியாக சர்வதேச சமூகம் உதவி செய்ய முன்வர வேண்டும் என வடகிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய கருணாரட்ணம் அடிகளார் உடனடியாக அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் எமது உறவுகள் தாயகத்தில் பாதிப்பிற்குள்ளான தமது உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய பொறுப்பும் கடமையும் அவர்களிடமே உள்ளது.

தமிழர் தாயகப் பகுதியில் என்றும் நிகழ்ந்திராத வகையில் பெரும் எண்ணிக்கையான உயிர்களைக் கோரமாகப் பலிகொண்டும் பலரைக் காயப்படுத்தியும் உள்ள இக்கடல் கொந்தளிப்பு மக்களின அளவிடமுடியாத சொத்துக்களை அழித்தும் கரையோரக கிராமங்களை முற்றாகவே தரைமட்டமாக்கியுள்ளது.

போர்ச்சுமைக்குள் வாழ்ந்து, நலிந்து போயிருக்கும் மக்களை கடல் கொந்தளிப்பு மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளது.

புலம் பெயர்ந்த எம் உறவுகளும் சர்வதேச நிறுவனங்களும் தொடர்ந்து எம் சோகத்தில் பங்குகொண்டு உதவியளிப்பதற்கு பாராட்டுத் தெரிவிப்பதோடு பாரிய சர்வதேச உதவிகள மூலமே எம்தேச மீள் கட்டுமானங்களை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வடகிழக்கு அழிவுகள், சேதங்கள் சர்வதேச ஊடகங்கள் மற்றும் அரச ஊடகங்கள் மூலம வெளி உலகிற்கு தெரியப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (க-4)

## துயர்துடைப்பு பணிகளில் ஜோசப் எம்.பியைக் காணோம்

### பாதிப்புற்ற மக்கள் விசனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் துயர் துடைப்புப் பணிகளில பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் ஈடுபடாமை குறித்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் பலியானதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

இந் நிலையில், மாவட்டத்தின் சக பாராளுமன்ற உறுபபினர்கள் பாதிப்புற்ற பகுதிகளில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் போது ஜோசப் பரராசசிங்கம் கொழும்பில் நிற்பது குறித்தும் ஊடகங்களுக்கு மட்டும் அறிக்கை விடுத்து வருவது குறித்தும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட வெறுமனே பார்வையிட்டு செல்வதுதான் பணி என நினைக்காது பாதிப்புற்ற பகுதிகளில் களத்தில் நின்று செயலாற்ற வேண்டும் எனவும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துளளனர். (க-4)

## நயினாதீவில் இன்று விசேடபூசை

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் அனர்த்தத்தால் பரிதாபகரமாக உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆத்ம சாந்திக்காகவும் உடல் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் உள்ள மக்களின் மன அமைதிக்காகவும் எதிர்காலத்தில் இப்படியானதோர் பேரனர்த்தம் ஏற்படாதிருக்க வேண்டியும் இன்று மு.ப. 10.00மணிக்கு நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடாத்தப்படவுள்ளது.

எனவே இன்றை தினத்தில் மக்கள் அனைவரும் தவறாது வருகை தந்து இந்நிகழ்வில் பங்கேற்றுக் கொள்ளுமபடி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

## ஊடகத்துறையினர் வன்னி செல்லத்தடை

(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்ட 20 ஆயிரம் உயிர் இழப்புக்களையும் 1 மில்லியன் மக்களின் இடப்பெயர்வுகளையும் இருட்டடிப்புச் செய்து வரும் சிங்கள தென்னிலங்கை அரச ஊடகங்கள் வன்னிப பகுதிக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் செலலும் பல வெளிநாட்டு ஊடகத்துறையினரை செல்ல விடாமல் தடுத்து வருவதாகவும் அவர்களுக்கு மறைமுக மிரட்டல்களை விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல ஊடகவியலாளர்களுக்குத் தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் இலவச போக்குவரத்து வசதிகளைச் செய்து தென்னிலங்கையில் பொய்யான ஊடகப் பிரசாரத்தினை மேற்கொள்கின்றனர்.

அவர்களால் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு பத்திரிகையாளர்கள் தமிழ் மக்களின் அவலங்களைப் பார்வையிடச் செல்வதறகு அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிகள் குறித்து டி.யூ.குணசேகர மற்றும் ஹரீம் பீரிஸ் விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

கடல கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக அரசியல் யாப்பு அமைச்சர் டி.யூ. குணசேகர மற்றும் ஜனாதிபதியின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளின் பணிப்பாளரும் ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம செய்தனர்.

யாழ். செயலகத்தில் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணப்பணிகள் குறித்து அமைச்சர் டி.யூ குணசேகர ஆராய்ந்தார்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக நிவாரண நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளும் பங்குகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலகத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உள்ளிட்ட முப்படை உயர் அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பிரிவு துன்பம் தரக்கூடியது தான். இன்பத்திற்காகப் பணத்தை நம்ப முடியுமா? பணம் கைமாறிச் செல்வது அல்லவா? மாறாத ஆன்மாவை விட்டுவிட்டு உடல் நலத்தையோ வேறு எதையோ சார்வது இன்றோ நாளையோ துன்பத்தைக் கொண்டு வந்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

## புலிகளின் திட்டங்களுக்கு...

பதற்கும் அரசாங்கத்தினது உதவி களையும் ஆதரவு ஒத்துழைப்பு களையும் ஒருங்கிணைப்பதற்கும் நோர்வே அனுசரணையாளர்களூ டாக அரசாங்கத்திடம் சில ஒருங் கிணைப்புக்களை அனுப்பியிருக் கின்றோம். அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதையிட்டு நாங் கள் மகிழ்ச்சியடைகிறோம் என்றார்.

ஏனைய பகுதிகளிலும் ஒரே மாதிரியான அழிவுகள் இடம்பெற் றிருந்தாலும் எங்களுக்கு உள்ள பெரிய சவால் யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட எமது பிரதேசங்களில் தான் இவ் அனர்த்தத்தில் இருந்து மீட்கப்பட்ட மக்களை தங்க வைத்து பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளது. குறிப்பாக பளைப் பிரதேசத்தில் இடிந்த நிலையில் உள்ள ஒரு பாட சாலை இப்பொழுது தான் மீள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்குள் மட்டும் 6000 வரையான மக்கள் உள்ள னர்.

இவர்களை ஏனைய இடங் களுக்கும் கொண்டுசெல்ல முடியா துள்ளது. இதுவே எமக்கு பெரும் சவாலாக இருக்கின்றது என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.(ச)

## ஒரு லட்சம்...

லும் போதிய ஆளணி வசதிகள் இல்லாததினால் எங்கும் துர்நாற் றம் வீசுவதுடனும், தொற்று நோய் கள் ஏற்படும் அபாயமும் தோன்றி யுள்ளது. (ச)

## தொலைத்...

ளனர்.யாழ். பஸ்தரிப்பு நிலையம், யாழ். வைத்தியசாலை வெளிநோ யாளர் பிரிவு, யாழ். வைத்திய சாலை நோயாளர் விடுதி, யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன் (பர மேஸ்வராச் சந்தி), யாழ். கொக் குவில் பொற்பதி ஆலயத்திற்கு அருகாமை ஆகிய ஐந்து இடங் களிலும் மேற்படி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத் தொலைத் தொடர்பு நிலையங்கள் ஊடாக தங்க ளுக்கு தேவையான இடங்க ளிற்கு தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். (த)

## அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், வவுனியா,மட் டக்களப்பு கல்வியற் கல்லூரி களைச்சேர்ந்த முதலாம் இரண் டாம் வருட உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களை நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மண்ட பத்தில் ஒன்றுகூடுமாறு பீடாதி பதி கமலநாதன் கேட்டுள்ளார்.

## ஒரே குடும்ப...

அங்கு எவரும் இல்லாததால் தமது உறவுகளைத் தேடும் பட லத்தை ஆரம்பித்தனர்.

அதன்போது சிறியதாயின் ஒருமகன் மட்டும் உயிருடன் தப்பி அகதிமுகாமில் இருப்ப தைக் கண்ணுற்றனர். அவனிடம் வினவியபோது அக்குடும்பத்தி னர் அனைவரும் இறந்துபோனமை தெரியவந்துள்ளது.

தான் மரம் ஒன்றினைக் கட் டிப்பிடித்துக்கொண்டு இருந்ததா லேயே கடல்நீர் இழுத்துச்செல் லாமல் உயிர் தப்பியதாகவும், தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்ட தாகவும் விழி ஓரங்கள் நனைய விம்மிவிம்மி கூறினான். (ச)

## இன்று...

படுகிறது. நோயாளர்களை ஏற் றிச் செல்லும் வாகனங்களை தவிர மற்றைய வாகனங்கள் அனைத்தும் பயணத்தை இடை நிறுத்தி அமைதி வணக்கம் செலுத்த வேண்டும்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் இன்று துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களைக் கேட்டுள்ளார். (ச)

## யாழ். வந்த பிரதமர் குழுவுக்கு...

கடல் கொந்தளிப்பினால் பாதிப் படைந்த வடமராட்சின் கரையோரப் பகுதிகளையும், அகதிமுகாம் களில் தங்கியுள்ள மக்களையும் பார்வையிடுவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி பிரசாரச் செயலர் விமல்வீரவன்ச, ஜே.வி.பி யின் காணி நீர்ப்பாசன அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கா, வர்த் தக நுகர்வோர் விவகார அமைச் சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்தனர்.

இவர்களின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.செயல கம முன்பாக பொதுமக்கள் மறி யல்போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் யாழ்.செயலகம் முன் பாக பொலிஸாரும் இராணுவத்தி னரும் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றம்நிலை உருவா னது. இதனால் தமது யாழ். செய லக விஜயத்தை நிறுத்திவிட்டு குழுவினர் வடமராட்சிக்குச் சென்ற னர். அங்கு பாதிப்படைந்த கரை யோரப் பிரதேசங்களைப் பார்வை யிட்டனர். தொடர்ந்து பருத்தித் துறை பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்கு கலந்துரையாடிய அவர்கள், வட இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்றார்கள்.

பிற்பகல் 1.30 மணிக்கு இரா ணுவ வாகனங்கள் புடைசூழ பலத்த பாதுகாப்புடன் பாதிக்கப் பட்ட மக்கள் தங்கியுள்ள புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை முகாமுக்குள் உட்பிரவேசிக்க முற்பட்டவேளை அங்கு தங்கியி ருந்த பாதிக்கப்பட்ட மக்கள் ‘எம் மைத் தேடி இப்பொழுது ஏன் வருகிறீர்கள்’ இதுவரை பாராமுக மாக இருந்துவிட்டு அரசியல் பிர சாரத்திற்காகவா வந்தீர்கள் என ஏசி உட்பிரவேசிக்கவிடவில்லை. இருந்தும் அவர்கள் உங்கள் நல னைக் கவனிக்கவே நாங்கள் இங்கு வந்துள்ளோம் எனக்கூறி உட்பிரவேசிக்க முற்பட்டனர்.

இதன்போது கையில் அகப் பட்ட பொருட்களாலும், பழஞ் சோற்றினாலும் பொதுமக்கள் அவர்கள் மீது வீசினர். ஆத்திரம் அடைந்த நபர் ஒருவர் மகிந்த ராஜபக்ஷவின் தோளிலிருந்த சால்வையை இழுத்து அவரது கழுத்தைத் திருகுவதற்கு மு பட்டார்.

இக்களேபரத்தில் குழுவினரு டன் வந்த ஒருவருக்கு, தலையில் காயமடைந்து இரத்தம் வெளி யேறியதாகவும் தெரியவருகிறது.

இதனையடுத்துப் பிரதமர் குழுவினர் வரணி இராணுவ முகாமிற்குள் சென்று அங்கிருந்து உலங்கு வானூர்திமூலம் கொழும பிற்கு திரும்பியதாகத் தெரிவிக் கப்படுகிறது.

ஜே.வி.யினருக்கு வடமராட்சி யில் பெரும் எதிர்ப்புக் கிளம்பி யுள்ளதாக படையினருக்கு தக வல் கிடைத்ததையடுத்து ஜே.வி. பியினர் உலங்கு வானூர்தியில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார் வையிட்டதாகத் கூறப்பட்டது. எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை அங்கு வந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் விரட் டப்பட்டனர். இதனால் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டது.

(த-101,113,52,19,05,130)

## குடாநாட்டில் கரையோர...

மேற்படி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 150 குடும்பங்கள் புங்குடுதீவு மகாவித்தியாலயம் மற் றும் கமலாம்பிகை வித்தியா லயம் ஆகியவற்றில் தங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புங் குடுதீவு கடற் பிரதேசங்களையும் தாக்கிய பாரிய அலைகளினால் மீன்பிடி வலைகள் பல பாரிய சேதத்திற்குள்ளானமை குறிப்பிடத் தக்கது.

மேலும் வடமராட்சிப் பிரதேசத் திலும் மக்கள் அச்சப்பட்டு இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரியவரு கிறது.

இதேவேளை கடல் கொந்த ளிப்பு ஏற்படும் அபாயம் உள்ள தால் கரையோரப்பகுதி மக்களை கடல் பிரதேசத்தில் இருந்து விலகி இருக்குமாறு காரைநகர் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து அக் கரையோ ரப் பகுதிகளில் இருந்து சுமார் 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில தஞ்சம் அடைந் துள்ளனர்.

குருநகர் பகுதி மக்கள் கடல் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து நல்லூர் மங்கயற்கரசி வித்தியால யத்தில் தங்கியுள்ளனர்.

பொன்னாலை கடற்கரையோர மாகவுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறி வேறிடங்களில் தங் கியிருக்குமாறு கடற்படையினர் கூறியதையடுத்து அவர்கள் அங் கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதேவேளை சிறிய அளவி லான நிலஅதிர்வும் பதிவாகிவரு கின்றபோதும், அனர்த்தத்தை விளைவிக்கும் கடல் அலைகள் தாக்கக்கூடிய நிலைமை இல்லை என்றும் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

(ற-16,126,52,246,39)

A/L - 2007
(கலை. வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி 8
காலை 8 மணி
DMI
யாழ். நகர்
(c-925)

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ் நகர்
தரம்-1 - O/L ,A/L வரையான வகுப்புக்கள் நடைபெறுகிறது
A/L 2007
ஆரம்பம் 02-01-2005 ஞாயிறு 9.30 AM
தரம் 1-A/L அனுமதிகள் ஜனவரி 15 வரை வழங்கப்படும்
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
தரம் 6,7,8, ENGLISH MEDIUM வகுப்புக்கள் நடை பெறுகிறது
(C-930)

D.C.A
(மக்கள் வங்கி அருகில்)
ஸ்ரான்லிறோட் யாழ்ப்பாணம்
A/L 2007
கலைப்பிரிவு
இ.நாகரிகம் :- சிவமகாலிங்கம்
தமிழ் :- கருணா, பாலமுரளி
அளவையியல் :- ஜெயசுரேஸ்
புவியியல் :- கிரிதரன்
அரசறிவியல் :- சந்திரன்
ஆரம்பம் 01.01.2005
சனி காலை 8.00 மணி
அனுமதிகள் அன்றையதினமே
புதிய கல்வியை புதிய ஆண்டில் நல்ல நேரத்தில் ஆரம்பிப்போம்
(C/926)

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
அஜித் (இருவேடம்) பூஜா
அட்டகாசம்
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே)
1 ROBERT

ராஜா, யாழ்ப்பாணம்
(ரீல்ஸ்)
இயக்கம் சுந்தர் (C)
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாதன்ஸ் சினிமா (யாழ்)
(குளிரூட்டப்பட்டது)
காட்சி நேரம்: 10.30, 2.30,
6.30, 6.30, 9.00 (பு.நே)
ANACONDA - 2
(ஆங்கிலம்)
நிதியுதவிக் காட்சி
01.01.2005 அன்று M.G.R நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
இப்பட வசூல்பணம் வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்முகமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப் படும். (கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 பு.நே)

புது புத்தாண்டை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி
Hello
I.D.D லோக்கல் இணைப்புக்களுடன் எப் பிரதேசத்திற்கும்
தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.
ஒருவருட உத்தரவாதம் உண்டு
விலை 13900/= மட்டுமே
I.D.D ரூபா 25/= மட்டுமே
அழைப்புக்கான வாடகை
மாதக்கட்டணம்: 150/=
வெளிச் செல்லும் அழைப்பு (பகல்) 1 நிமிடம்: 11/=
வெளிச் செல்லும் அழைப்பு (இரவு) 1 நிமிடம்: 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் 1 நிமிடம்: 4/=
உள்வரும் அழைப்பு இரவு - இலவசம்
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப் பிரதேசத்திற்கும் இயக்கக்கூடிய
சேவையென அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயக்குகிறது மொபிடல் இணைப்பு
சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணைநிறுவனம்
குறிப்பு: டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டுமே
New Branch:
No: 309A, Floor (Opp. union bank)
Galle Road Bambalapitiya
Colombo - 04
பவர் செலூலர் ரேடிங் கம்பனி
Office: இல. 185 முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P. 212227070, 0712399220, 0777281521
கையடக்கத் தொலைபேசிகள் திருத்தியும், புதிய கையடக்க தொலைபேசிகள் லொக் உடைத்தும் கொடுக்கப்படும்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.